# 3-ஆம் ஆண்டில் கைத்தடி

கைத்தடி வாசகர்கள் அனைவருக்கும்

அன்பு வணக்கங்கள்,

தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக எங்களை ஊக்கப்படுத்தி இதழைத் தொடர்ந்து வெளிவரச் செய்து வரும் வாசகர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் கருத்தாளர்களுக்கும் எங்களது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

தொடர்ந்து உங்களின் பேராதரவோடு பயணிக்க விரும்புகிறோம்!

நன்றி! நன்றி!! நன்றி!!!

அன்புடன்

**மு.சி.அறிவழகன்**

– தலையங்கம் –

## வாசகர் பார்வையில்

**மூ**ன்றாம் ஆண்டில் தடம் பதிக்க இருக்கும் கைத்தடி மாத இதழுக்கும், இதழாசிரியர் அறிவழகன் அவர்களுக்கும் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்கிறேன்! 1000 இதழ்கள் இருந்தாலும்கூட கைத்தடிக்கு தனிச்சிறப்பு உண்டு, பெண்ணியம் தொடங்கி சமூக நீதி வரை அனைத்திலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது! தொடர்ந்து இதே சிறப்போடும் கூடுதல் சிறப்போடும் அறிவாயுதமாய் வெளிவர வாழ்த்துகளை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்! நன்றி!

**– வித்தியாசாகர், தஞ்சாவூர்**

**சி**ல ஆண்டுகளாக எனக்கு இதழ்கள் வாசிக்கும் பழக்கம் நண்பர் வழியாகக் கிடைத்தது அதே நண்பரின் அறிவுரையில் அறிமுகம் ஆன இதழ் “கைத்தடி” மாத இதழ். கூடுதலாக வாசிக்க வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டிய இதழ் கைத்தடி. தொடர்ந்து பலரை சமூக மாற்றத்திற்காகத் தூண்டிவரும் கைத்தடி இதழ் பரவலாக்கப்பட வேண்டும் என்பதே என்னைப் போன்ற வாசகர்களின் விருப்பம்! வாழ்த்துகள்! நன்றி!

**– பிரகாஷ், திருப்பூர்**

## கடவுளும் நாமும்

**க**டவுளைப்பற்றி நான் எதிர்ப்பாய் இருக்கிறேன் என்றால், ஏனப்படி இருக்கிறேன் என்று - ஒரு கடவுள் பக்திக்காரரும் சிந்திப்பதில்லையே.

நான் ஏன் கடவுளை ஒழிக்க வேண்டுமென்கிறேன் ? கடவுளை உண்டாக்கிக் கொண்ட எவருமே - யோக்கியமான அல்லது யோக்கியத் தன்மையுடைய கடவுளை ஏற்படுத்திக்கொள்ளவில்லையே!

அவரவர் சுயநலத்திற்கேற்ப, முட்டாள்தனத்திற்கேற்ப, ஒழுக்கமற்ற, நேர்மையற்ற, சக்தியற்ற கடவுள்களையும், தங்கள் தங்கள் சுயநலத்திற்கேற்ற கடவுள்களையும், தம் எதிரிகளைஒழிக்க வேண்டுமென்கிற ஆவலுக்கேற்ற கடவுள்களையும் உண்டாக்கிக் கொண்டால், அவற்றை - அவற்றால் பாதிக்கப்படுபவர்களும், அறிவாளிகளும் ஏற்றுக் கொள்ள முடியுமா? சுயநலமற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

உலக மனித சமுதாயத்திற்கு ஒருவன் தொண்டு செய்ய வேண்டுமானால், முதல் தொண்டாக இப்படிப்பட்ட கடவுள்கள் ஒழிப்பு வேலையில் இறங்கினால்தானே அவன் உண்மையான, யோக்கியமான, அறிவாளியான தொண்டனாக இருக்க முடியும்?

உதாரணமாக, ஒரு மனிதன் தான் மற்ற மனிதனைவிட மேலான, மேல் பிறவியான உயர்சாதி மனிதன் என்று சொல்லிக்கொண்டு அதற்காகவென்று ஒரு கடவுளையோ பல கடவுள்களையோ கற்பித்துக்கொண்டு, அதுவும் அயோக்கியத்தனமான, ஒழுக்கங்கெட்ட கடவுள்களைக் கற்பித்துக்கொண்டு, ‘அவைகள்தாம் என்னை எங்களை உயர்சாதியாய்ப் பிறப்பித்தது’ என்றால் - அந்த உயர் சாதியல்லாத மற்றவன் அதனால், அவற்றால் இழிசாதி, கீழ்ச் சாதியமாக ஆக்கப்பட்டவன் அந்த - அவற்றிற்கு ஆதாரமாகக் காட்டப்படும் கடவுளை - கடவுள்களை ஒழிக்க, அழிக்க, சின்னப்படுத்த முன்வராதவன் மனிதனாவானா? அறிவாளியாவானா? மானமுள்ளவனாவானா? தன்னை மனிதன் என்று சொல்லிக்கொள்ளத் தகுதியுடையவன் ஆவானா?

கடவுள் நம்பிக்கைக்காரர்கள் யாராகத்தான் இருக்கட்டுமே, அவர்களை, ‘எதற்காகக் கடவுள் ஏற்பட்டது? அதனால் உனக்கு என்ன பலன்?’ என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவான்? அவன் ஏதாவது ஒரு பதிலைச் சொல்லுவானானால் ‘அதனால் எல்லா மக்களும் பயனடைகிறார்களா? மகிழ்ச்சியடைகிறார்களா? யாராவது துக்கம், வேதனை, இழிவு, கவலை அடையாமல் இருக்கிறார்களா? என்றால் என்ன பதில் சொல்லுவான்? மகிழ்ச்சி, நலம், மேன்மையடைந்திருக்கும் எவனும், ‘கடவுள் சித்தத்தால்’’ என்றால் என்ன பதில் சொல்லுவான்? அவற்றிற்கு நேர்மாறான துன்பம், தொல்லை, கவலை அடைந்து கொண்டிருப்பவன் முட்டாளாய் இருந்தால், ‘கடவுள் சித்தம்’’ என்பான். ஏனப்படியென்றால், ‘என் கர்மம்’’ என்பான். இப்படிப்பட்ட அயோக்கியர்களுக்காக, மடையர்களுக்காக நாமும் இவர்களோடு சேர்ந்து கொண்டு இந்தக் கடவுள்களைக் காப்பாற்றுவதா?

‘உயர்’சாதிக்காரன், ‘நலன் அனுபவிப்பவன்’ கடவுளைக் காப்பாற்றினால் - ‘தாழ்ந்த’ சாதிக்காரன், ‘கேடு அனுபவிப்பவன்’ கடவுளை ஒழிப்பது என்பதுதானே நியாயமும், நேர்மையுமாகும்; அறிவுமாகும்?

அப்படிக்கில்லையானால், அவன் அடிமை, மானமற்றவன், கூலி, சுயநலக்கார மடையன் என்றுதானே கொள்ளப்பட வேண்டும்?

ஆகவே, தோழர்களே,

கவலையும், துன்பமும், இழிவும் உள்ளவர்களே சிந்தியுங்கள். தங்களுக்கு விமோசனம், விடுதலை, மனிதத் தன்மை - கடவுள் ஒழிப்பிலும், அழிப்பிலும், இழிவுபடுத்துவதிலுந்தானிருக்கிறது.

இதனால், யோக்கியமான, அறிவாளியான யார் மனமும் புண்பட இடமில்லை. சுயநலத்திற்காகச் சிலர் ஆத்திரப்படலாம்; ‘மனம் புண்படுகிறது’’ என்று சொல்லலாம். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்; சிறிதும் அச்சப்படாதீர்கள். நாம் யாரையும் அவர் மனம் புண்படுவதற்காக இதைச் சொல்லவில்லை; செய்யவில்லை, இதற்காக அறிவற்றவர்களால், சுயநலக்காரர்களால், கூலிகளால் நமக்குத் தொல்லை ஏற்பட்டால், மகிழ்ச்சியோடு ஏற்று, மானத்தோடு பாய்ந்தெழுங்கள், யார் மீதும் வெறுப்பு, குரோதம் கொள்ளாதீர்கள்.

**(நூல் : ‘கடவுள் ஒரு கற்பனையே’’ – 1971)**

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

ஆசிரியர் குழு:
**கா. தமிழரசன்**
புலவர் **நாகை பாலு**, த.மு.எ.ச.
முனைவர் **கு. முருகேசன்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன்**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ், ரா.ராஜசேகர், சிகரன்**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப், 76677 55673**

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, திராவிடராசன், ஜெர்லின் பிரீமா, கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா**, வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்**, வழக்கறிஞர்



ஆசிரியர் குழு & அலுவலக முகவரி

கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ),
காரிமங்கலம் (வ), தருமபுரி – 635 205.
அலைபேசி: 73733 33078, 86673 42047
மின்னஞ்சல்:kaithadimonthly@gmail.com இணையதளம்:kaithadi.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| மறைக்கப்படும் பரதக்கலையின் வரலாறு | 5 |
| மிகச் சிறந்த வசனகர்த்தா தந்தை பெரியார் | 6 |
| ஒன்பதாம் வகுப்பு மாணவி பெரியாரைக் கற்றபின் கொடுத்த பதில்கள் | 8 |
| பயணம் | 9 |
| தேர்தல் ஜனநாயகம் | 10 |
| எழுத்தெனப்படுவது | 12 |
| காதலுக்கு இணையேதுமில்லை | 14 |
| சாதியற்றோர் சான்றிதழ்... புரட்சியா... பொறியா? | 16 |
| கறுப்பர் மக்களின் வரலாற்று மாதம் | 18 |
| மந்திரமா? தந்திரமா? | 19 |
| அரசியல் சட்டமா? சனாதன தர்மமா? | 20 |
| பெண்ணியம் பற்றிய புரிதல் | 24 |
| பகுத்தறிவில் புத்துலகம் காண்! | 25 |
| உயிர்மெய் – தொடர்கதை | 26 |
| திராவிடம் அறிவோம் – நூல் அறிமுகம் | 28 |
| மூட்டு தேய்மானமும் அதன் மருத்துவமும் | 29 |
| தமிழர் விளையாட்டுகள்– குலை குலையா முந்திரிக்கா | 30 |
| எச்சில் தொட்டி – தொடர்கதை | 32 |
| ஊருக்கு வெளியே– கவிதை | 34 |


| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 30 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 300 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 600 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 1200 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1500 |
| ஆயுள் சந்தா (10 ஆண்டு மட்டும்) | ₹ 3000 |

NAME : KAITHADI
A/C NO : 20160200001582
IFSC CODE : FDRL0002016 PH. NO: 7373333078
A/C TYPE : CURRENT ACCOUNT
FEDERAL BANK, DHARMAPURI

வழக்கறிஞர் குயில்மொழி



# மறைக்கப்படும் பரதக்கலையின் வரலாறு

## (The Undoing Dance by Srividya Natarajan)


“தி அண்டுய்ங் டான்ஸ்”

ஸ்ரீவித்யா நடராஜன் எனும் பரத நாட்டியக் கலைஞரால் எழுதப்பட்டிருக்கும் இந்தப் புத்தகத்தைக் குறித்து ஒரு இணையதளத்தில் படிக்க நேர்ந்தது. அவரின் துணிச்சலான பதில்களும் இந்தப் புத்தகத்தின் கருப் பொருளும் என்னை உடனே ஈர்த்தது. பரதநாட்டியத்தின் வரலாற்றையும், தேவதாசி ஒழிப்பு பற்றியும் அதன் பின் பரதத்தின் இன்றைய நிலையையும் பேசுகிறது ஜகர்னட் பதிப்பம் வெளியிட்டிருக்கும் இந்தப் புத்தகம்.

ஸ்ரீவித்யா அவர்கள் தஞ்சை நால்வர் வழி வந்த சங்கீத கலாநிதி திரு.கே.பி.கிட்டப்பா பிள்ளை அவர்களின் மாணவர். ஒரு நடனக் கலைஞருக்கே உரித்தான பாணியில் அவ்வளவு அழகாக ஆழமாகத் தான் சொல்ல வந்த கருத்தை சொல்லியிருக்கிறார்.

ஒரு வரலாற்றை புனை கதையின் மூலமாகச் சொல்லுவதே ஒரு கலை. தஞ்சாவூர் அருகில் இருக்கும் கல்யாணிக்கரையில் வசிக்கும் ராஜாயி, அவரது மகள் கல்யாணி, கல்யாணியின் மகள் ஹேமா ஆகியோரைச் சுற்றி நகர்கிறது கதை. 1990ல் ஹேமாவின் பார்வையில் தொடங்கி, பல்வேறு காலக்கட்டங்களில் முன்னும் பின்னுமாகப் பயணிக்கிறது.

தேவதாசிகள் ஒரு காலத்தில் கொண்டாடப் பட்டார்கள் என்பதையும், அரசர்கள் தொடங்கி அங்கிருக்கும் மக்கள் வரை அனைவரும் அவர்களை எப்படிக் கொண்டாடினார்கள் என்பதையும், அவர்களது மனைவிகள் இதனை எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பதையும் மிக விரிவாகப் பதிவு செய்திருக்கிறார்.




ஆங்கிலேயர் காலத்தில் எப்படி இந்த முறைக்கு எதிர்ப்பு இருந்தது என்றும், சில கிருத்துவ நிறுவனங்கள் அந்தக் குடும்பத்தில் பிறந்த பெண் குழந்தைகளை எடுத்துச் சென்று படிக்க வைத்து அவர்களுக்கு எப்படி வேறொரு வாழ்க்கை முறையை அறிமுகப் படுத்தினார்கள் என்பதையும் விரிவாக எழுதியிருக்கிறார். அன்னி பெஸன்ட் அம்மையாரின் பங்கையும் அழகாகத் தொட்டுக் காட்டுகிறது இந்தப் புத்தகம்.

1947இல் கொண்டு வரப் பட்ட தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்திற்கு எதிராக பல தேவதாசிகளே வழக்கு நடத்தியதையும், இந்த முறையை ஒழிப்பதில் டாக்டர். முத்துலட்சுமி அம்மா மற்றும் தந்தை பெரியாரின் பங்கையும் மறக்காமல் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். தேவதாசி முறை ஒழிப்பு வரை அந்தக் கலையைக் கற்றுக் கொள்ளாத ஒரு சமூகம் எப்படி அதன் பின் இந்தக் கலையை கைப்பற்றியது என்பதை கதையின் போக்கில் இருந்து விலகாமல் சொல்லி, இன்றும் அந்தக் கலையின் நிலை எப்படி இருக்கிறது, அதன் மரபும் வரலாறும் மறைக்கப்பட்டு திரிக்கப்பட்டு இது தமிழர் கலையே இல்லை என்ற பிம்பம் உருவாக்கப்பட்டிருப்பதையும் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார் ஸ்ரீவித்யா.

ஆனால் அந்தச் சமூகத்தில் பிறந்த பெண்கள் அனைவரும் இந்த வாழ்வியல் முறையை விரும்பி ஏற்றது போல் காட்டியிருப்பது சரியா என்ற கேள்வி எழுகிறது. இன்றும் பல பெண் குழந்தைகள் அந்த வாழ்க்கை முறைக்கு தள்ளப் படுகிறார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்க, அந்த வாழ்வியல் முறையை இப்படிப் பெருமையாக வருணிப்பது சரி இல்லை என்றே தோன்றுகிறது.

தேவதாசி ஒழிப்பு பற்றிப் பேசும் பொழுது, அந்தக் குடும்பத்தில் பிறந்து அந்த வாழ்வு முறையால் பாதிக்கப்பட்டு, அதில் இருந்து வெளியேறி அதற்கு எதிராகப் பல போராட்டங்கள் நடத்திய அன்னை மூவாலூர் இராமாமிருதம் அம்மையார் பற்றி சொல்லியிருக்க வேண்டும். இந்தக் குறைகள் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்த நூல் இன்னும் முழுமையாக இருந்திருக்கும் ஸ்ரீவித்யாவின் இந்த புத்தகம். இருப்பினும் பரதநாட்டியம் தமிழர் கலையே என்று அழகாக உறுதியாகச் சொல்லும் இந்த நூலை நாம் அனைவரும் ஒரு முறையாவது படிக்க வேண்டும். ●



▪ மார்ச் 4 – தேசிய பாதுகாப்பு தினம்.

# மிகச் சிறந்த வசனகர்த்தா தந்தை பெரியார்

## ▪ நடிகர் சத்யராஜ்

நெல்லையில் 30–12–2018 அன்று நடைபெற்ற தந்தை பெரியார் 140வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் நடிகர் சத்யராஜ் ஆற்றிய உரை

### திரு. சத்யராஜ் அவர்களின் பேச்சு

இங்கு பெருந்திரளாக கூடியிருக்கும் பெரியாரின் பெருந்தொண்டர்களுக்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகத்தின் மிகச் சிறந்த வசனகர்த்தா தந்தை பெரியார் தான். அவரை மீறிய ஒரு வசனம் கிடையாது. ஒவ்வொரு டையலாக் பேசும்போதும் நான் டைரக்டரிடம் கேட்பதுண்டு, இது என்ன நம்ம செட்டப் செய்ததா என்று கேட்பேன், இல்லை இது அய்யா பேசியது என்பார், ஏனென்றால் சொல்ல வேண்டிய விசயங்களை ஆணித்தரமாகவும் குழப்பமில்லாமலும் கிண்டல் கேலியோடு சொல்வதற்கு அய்யாவை மிஞ்ச யாருமே இல்லை, சமீபத்தில் வாட்ஸ்-அப்பில் எனக்கு ஒரு பெரியார் தொண்டர் அனுப்பியிருந்தார், அய்யா சொல்கிறார் எனக்கும் கடவுளுக்கும் என்ன முன் விரோதமா? நான் எதற்கு கடவுளைத் திட்டுகிறேன், அவருக்கும் எனக்கும் என்ன விரோதம், அவரை நான் முன்பின் பார்த்தது கூட இல்லை, அப்படியிருக்கையில் அவருக்கும் எனக்கும் எப்படி பிரச்சனை வரும் என்கிறார். ஒரு காட்சியில் காமராஜர் முதலமைச்சராக வேண்டும் என்று வரதராஜுலு நாயுடு சொல்லுவார், காமராஜர் நீண்ட நேரம் யோசித்து எனக்கு எழுத படிக்க தெரியாது, நான் எப்படி முதலமைச்சராக முடியும் என்பார். தந்தை பெரியார் காமராஜரைச் சந்தித்து இது வரைக்கும் தமிழநாட்டில் ஒரு பச்சைத் தமிழன் முதலமைச்சராக வந்ததில்லை, எனவே நீங்கள் தான் முதலமைச்சராக வர வேண்டும் என்கிறார், அதற்கு காமராஜர் சொல்கிறார் நான் படிக்கவில்லையே என்கிறார். தந்தை பெரியார் சொல்கிறார் படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் என்ன வித்தியாசம்? படித்தவனுக்கு படித்த புத்தி மட்டும் தான் இருக்கும், படிக்காதவனுக்குததான் சொந்த புத்தி இருக்கும், எனவே நீங்கள் தான் முதலமைச்சராக வர வேண்டும் என்பார், தந்தை பெரியார் சொன்னது போல் இதைவிட எளிமையாக எப்படிச் சொல்ல முடியும். அதே போல ஒரு கலப்புத்திருமணம் நடக்கிறது, நூறு வருடங்களுக்கு முன்னால் யோசித்துப் பாருங்கள் நாகம்மையார் அவர்கள் கணவனைக் குறிக்கும்பொழுது தோழர் ராமசாமி என்று பேசுவார், அத் திருமணத்தில் மணமக்களின் பெற்றோர் வெளியே கூச்சலிடுகிறார்கள், யாரைக் கேட்டு கலப்புத்திருமணம் செய்து வைத்தீர்கள் என்று பெரியாரிடம் கேட்கின்றனர், பெரியார் சொல்லுவார் மனுச ஜாதியில் பிறந்த ஒரு பையனுக்கும் மனுச ஜாதியில் பிறந்த ஒரு பெண்ணிற்கும் கல்யாணம் செய்து வைக்கிறேன், இது எப்படி கலப்புத் திருமணமாகும்,



மாட்டுக்கும் மனுசனுக்கும் கல்யாணம் செய்து வைத்தால் தான் அது கலப்புத் திருமணமாகும் ஒரு மனுசனுக்கும் இன்னொரு மனுசனுக்கும் நடக்கும் திருமணம் எப்படி கலப்புத் திருமணமாகும் என்பார், இதைவிட எப்படி எளிமையாகச் சொல்ல முடியும். நாகம்மையாரும் பெரியாரும் கோவிலுக்குப் போகிறார்கள், நாகம்மையார் கோவிலைச் சுற்றி வருகிறார்கள், பெரியாருக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்பதால் அவர் கோவிலுக்கு வெளியே உட்கார்ந்து விட்டார். நான்கு ரவுடி பசங்க நாகம்மையாரிடம் வம்பு செய்கிறார்கள், நாகம்மையார் கோவிலைவிட்டு ஓடி வந்துவிடுகிறார். பெரியாரை பார்த்தவுடன் அந்த நான்கு பேரும் ஓடிவிடுகிறார்கள், பார்த்தாயா நாகு, கோயிலுக்குள் இத்தனை சாமி இருக்கிறது, அத்தனை சாமியும் கையில் கத்தி, கடப்பாரை போன்ற பயங்கர ஆயுதங்களுடன் இருக்கிறது, எந்த சாமியும் உன்னைக் காப்பாற்றவில்லை பார்த்தாயா, இந்த ராமசாமி தான் காப்பாற்ற வேண்டும், பெரியாருடைய நிகழ்ச்சிகளைப் பற்றி இப்படி அடுக்கடுக்காக சொல்லிக் கொண்டே போகலாம்.

கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கனகராஜ் அவர்கள் சொன்னதில் ஒரு சிறப்பான விசயம் என்னவென்றால், பெரியாரா? மார்க்ஸா? அம்பேத்காரா? யார் சிறந்தவர்

என்ற ஒரு பட்டிமன்றம் தேவையே இல்லை, அதை விட்டுவிடுவோம், அண்ணல் அம்பேத்கர் ஈரோட்டில் பிறந்திருந்தால் பெரியாராக இருந்திருப்பார், பெரியார் மகாராஷ்டிராவில் பிறந்திருந்தால் அம்பேத்கராக இருந்திருப்பார், இரண்டு பேரும் ஜெர்மனியில் பிறந்திருந்தால் கார்ல் மார்க்ஸாக இருந்திருப்பார்கள், அவ்வளவு தான் வித்தியாசம். அந்தச் சூழல் தான் அவர்களை உருவாக்கும். ஜெர்மனியில் முதலாளி தொழிலாளி பிரச்சனை இருந்தது, அங்கு ஒரு கார்ல் மார்க்ஸ் தேவைப்படுகிறார். தென் ஆப்பிரிக்காவில் நிற வெறி இருந்தது, கருப்பர் வெள்ளையர் நிற வெறி, வெள்ளையாக பிறந்தவர் உயர்ந்தவர், கருப்பாக பிறந்தவர் தாழ்ந்தவர் எனும் இடத்தில் ஒரு நெல்சன் மண்டேலா தேவைப்படுகிறார், மார்டின் லூதர் கிங் தேவைப்படுகிறார், ஒரு ஆப்ரகாம் லிங்கன் தேவைப்படுகிறார். இந்தியாவில் தலைவிரித்தாடிய ஜாதி வெறியை ஒடுக்குவதற்காக இரண்டு கண்களாகப் பெரியாரும் அம்பேத்காரும் தேவைப்படுகிறார்கள்.

திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி நடந்தது. மிகப் பெரிய வெற்றி. தோழர் ராமகிருஷ்ணன் நடத்தினார், தோழர் அருள்மொழி அதில் கலந்துகொண்டார். கொளத்தூர் மணி அண்ணன், திருமுருகன் காந்தி, ஆசிரியர் பேன்ட் போட்டுக்கொண்டு மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டார். மகிழ்ச்சியாக இருந்தது, கருஞ்சட்டைப் பேரணி திருச்சியையே கலக்கிவிட்டது. எனவே சொல்கிறேன் அடுத்த வருடம் ஒரு நீலச் சட்டைப் பேரணி நடக்க வேண்டும், நானும், தோழர் ராமகிருஷ்ணன் அவர்களும், அருள்மொழி அவர்களும், கனிமொழி அவர்களும் நீலச் சட்டை அணிந்து வருவோம். அதற்கடுத்து ஒரு சிவப்புச் சட்டை பேரணி நடக்கட்டும், கருப்புச் சட்டை அணிந்தவர்களும் நீலச் சட்டை அணிந்தவர்களும் சிவப்புச் சட்டை அணிந்து கலந்து கொள்வோம். கருப்பும் சிவப்பும் நீலமும் ஒன்றாக இணைந்து இந்த ஆதிக்கச் சக்திகளை எதிர்க்க வேண்டும் என்று சொல்லவில்லை, அடியோடு துரத்த வேண்டும் என்பேன்.

பெரியாரும் அம்பேத்கரும் மார்க்சும் சொல்வது என்ன? மனிதனில் பிறப்பால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் கிடையாது. நான் இங்கு வந்தபோது சேரில் இடம் இல்லை இல்லை என்றால் பின்னாடி போய் நின்று கொள்வேன். ஒன்றும் பிரச்சனை இல்லை, இல்லை நீ பிறப்பால் தாழ்ந்தவன் நீ நாற்காலியில் அமரக் கூடாது, கீழே தான் உட்கார வேண்டும் என்று சொன்னால் எனக்கு கோபம் வருமல்லவா?. ஒரு பெண்ணாக இருப்பதனால் நீ ஆண்கள் மத்தியில் சமமாக உட்கார முடியாது, ஒரு ஓரமாக கை கட்டி நிற்க வேண்டும் என்றால் பெண்ணிற்கு கோபம் வருமல்லவா?. இந்தக் கோபத்தின் வெளிப்பாடு தான் பெரியாரும் அம்பேத்காரும். இந்த கோபத்தின் வெளிப்பாடாக அனைவரும் தட்டிக் கேட்க வேண்டுமானால் அவர்களுக்கு கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் முன்னுக்கு வர முடியும். இந்த இடஒதுக்கீட்டிற்குத் தடையாக ஒரு மூடநம்பிக்கை என்கிற கோட்டையை வைத்து அதற்கு ஜாதி மதத்தை அரணாக வைத்து அந்த மதத்திற்குக் கடவுள் என்னும் கற்பனைக் கருத்தியலை அரணாக வைக்கும்பொழுது பெரியார் அவர்கள் அந்த கற்பனை கருத்தியலை உருவி வீசுவது தான் சரி என்று முடிவு செய்கிறார். உலகம் தோன்றிய பொழுது மனிதனே கிடையாது, மனிதன் தோன்றிய பொழுது கடவுள் என்கிற கற்பனை கருத்தியல் கிடையாது. மனிதன் தோன்றிய பிறகு தான் கடவுள் வருகிறார். உலகம் தோன்றிய பொழுது உண்டான உயிரினம் ஒரு செல், அமீபா. அந்த ஒரு செல் அமீபா இரண்டாகப் பிரிகிறது, நான்காகப் பிரிகிறது, கடல் உயிரினம் முதல் குரங்கு வரை வருகிறது. குரங்கிலிருந்து மனிதன் வருகிறான், எனவே மனிதன் வரும் வரை கடவுள் இல்லை. மனிதன் வந்த பிறகு தான் கடவுள் வருகிறது என்றால் மனிதன் தான் கடவுளை படைக்கிறான். மனிதனுடைய சுயநலத்திற்காகவும், அவனுடைய ஆதிக்கத் தன்மையை நிலைநாட்டுவதற்காக அப்படி ஒரு கற்பனைக் கருத்தியலை உருவாக்குகிறான்.

தூத்துக்குடி பிளைட்டில் ஏற வரும் பொழுது வழியில் ஒருவர் கேட்டார் ‘ஏன் உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை” என்றார், ‘அட உங்களுக்கும் தான் கடவுள் நம்பிக்கை இல்லைங்க, எல்லாரும் பைலட்டை நம்பி தான் இருக்கிறோம்” ‘நானும் கண்ணாடி போட்டிருக்கிறேன், நீங்களும் கண்ணாடி போட்டிருக்கிறீர்கள், நானும் பார்வை கோளாறு ஏற்பட்டதும் முதலில் டாக்டரிடம் போனேன், நீங்கள் எப்படி பார்வை கோளாறு ஏற்பட்டதால் டாக்டரிடம் போனீர்களா? அல்லது கோயிலுக்குப் போனீர்களா?” என்று கேட்டேன், நானும் டாக்டரிடம் தான் சென்றேன் என்றார். அவ்வளவு தான் குழப்பம் தீர்ந்தது. இப்பொழுது இரண்டு பேருக்கும் கடவுள் நம்பிக்கை இல்லை, என்றேன். பிளைட் பணயத்தில் மீண்டும் கேட்டார், ‘சரி, இந்த மறுபிறவி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?” என்றார், ‘நாம் போகும் இந்த ஏரோப்ளேன் விபத்து ஏற்பட்டால் நாம் இறந்த பிறகு வேறு எங்காவது சந்தித்தால் இதை பற்றி யோசிப்போம், தெரியாத விசயத்தை பற்றி எப்படி பேசுவது, போன ஜென்மம் ஞாபகம் இது வரை எனக்கு வந்ததில்லை” என்றேன். இப்படியெல்லாம் ஒரு கற்பனைக் கருத்தியலை உருவாக்கி விட்டு அதனடிப்படையில் குலத் தொழில் தான் செய்ய வேண்டும் என்பதை எப்படி ஏற்பது. அயோக்கியத்தனத்தின் உச்சமே இந்த குலத் தொழில் முறை தான். எனது தாத்தா விவசாயி, எனது தந்தை மருத்துவர், நான் நடிகன், குலத் தொழில் என்று ஒன்று ஏற்பட்ட பொழுது சினிமா எனும் ஒரு துறையே கிடையாது. விஞ்ஞானம் வளரும் பொழுது யாராலும் எதையும் தடுத்து நிறுத்த முடியாது. அனைத்து மூடநம்பிக்கையும், ஜாதிப் பாகுபாடும் அடித்து நொறுக்கப்படும். கிராமத்தில் தெருக்கூத்து நடக்கும் பொழுது மேல்சாதிக்காரன் முன் வரிசையில் இருக்க வேண்டும், கீழ்சாதிக்காரன் பின்னால் இருக்க வேண்டும் என்பதாக இருந்தது, விஞ்ஞானம் வளர்ந்து மல்டிப்பிளக்ஸ் வந்ததும் உன் பக்கத்தில் இருப்பவன் என்ன சாதிக்காரன் என்பது உனக்குத் தெரியுமா? ஆன்லைனில் டிக்கெட் புக்கிங் செய்யும் பொழுது பக்கத்து இருக்கையின் சாதியை அறிந்தா புக்கிங் செய்கிறீர்கள்? விஞ்ஞானம் வளரும் பொழுது நீங்கள் சொல்லும் வெங்காயங்கள் தூள் தூளாக போகும். உங்கள் மூடநம்பிக்கை ஒன்றும் செய்ய முடியாது. எங்களுக்குத் துணையாக தாமஸ் ஆல்வா எடிசன், ஐன்ஸ்டின் போன்றோர் எங்களுக்குத் துணையாக இருக்கிறார்கள். பெரியாரைப் படித்துப் பார், அம்பேத்கரைப் படித்துப்பார், மார்க்சைப் படித்துப் பார். சிந்தனைத் தெளிவு பெறுங்கள். நன்றி, வணக்கம். ●



▪ மார்ச் 12 – இந்திய துணை ராணுவ தினம். தண்டி யாத்திரை தினம்.

த.ச.யாழினி, 9-ம் வகுப்பு, சத்தியமங்கலம்

# ஒன்பதாம் வகுப்பு மாணவி பெரியாரைக் கற்றபின் கொடுத்த பதில்கள்




ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி தான் கற்கும் பாடப்புத்தகத்தில் இருக்கும் பெரியாரின் சிந்தனைகள் பகுதியை படித்துவிட்டு அதில் கேட்கப்பட்டு இருக்கும் கேள்விகளுக்குக் கொடுத்த பதில்கள் இவை. ஒன்பதாம் வகுப்பு மூன்றாம் பருவ தமிழ்ப் பாடப் புத்தகத்தில்...

**கேள்வி 01 : "இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.**

இன்று பெரியார் இருந்திருந்தால் நாட்டில் நடக்கின்ற மூடப்பழக்க வழக்கங்களை முற்றிலும் ஒழிக்கப் பாடுபட்டிருப்பார். பெண்களுக்கான முன்னேற்றங்களை மேலும் அதிகப்படுத்த ஆலோசனைகள் சொல்லியிருப்பார். சமுதாயத்தில் சரிபாதி பெண்களுக்கு 50% இடஒதுக்கீடும், வேலைவாய்ப்பில் முன்னுரிமையைத்தர முயற்சி செய்திருப்பார். ஏனென்றால் தொடக்கப்பள்ளியில் பெண்களையே ஆசிரியராக்க வேண்டுமென்று 1929 ஆம் ஆண்டிலேயே சொன்னவர் பெரியார்தான்.பெண்கள் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம் என்று சொன்னதோடு பெண்களிடம் கரண்டியைப் பிடுங்கிவிட்டு புத்தகத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னவர்தான் அவர். அவர் மட்டுமே இன்று இருந்திருந்தால் ஊராட்சிமன்றம், சட்டமன்றம், பாராளுமன்றம் போன்றவற்றில் பெண்களை அதிகமாக நியமித்திருப்பார். ஏன் பிரதமரே ஒரு பெண் தான் வரவேண்டுமென்று மக்களிடம் பிரச்சாரம் செய்திருப்பார்.

**கேள்வி 02 : பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக.**

*வினா1 :ஈ.வெ.ராமசாமி உங்களது பெயர். உங்களுக்கு "பெரியார்" பட்டம் தந்தது யார்?*




*வினா2 :கள்ளுக்கடை மறியல், இந்தித் திணிப்பு, வடவர் எதிர்ப்பு போன்ற போராட்டம் செய்ய உங்களுக்குத் தூண்டுதலாக இருந்தது எது?*

*வினா3 :தமிழ்நாட்டுத் தலைவராக இருந்த நீங்கள் கேரளாவில் உள்ள வைக்கத்தில் போராடச் சென்றது ஏன்?*

*வினா4 :ஆணாக இருந்து பெண்களுக்காகப் போராட வேண்டிய அவசியமென்ன?*

*வினா5 : அனைத்து மதத்திலும் உள்ள மூட நம்பிக்கையை ஒழிக்கப் பிரச்சாரம் செய்தது ஏன்?*

**கேள்வி 03 : இன்றைய சமூகம் பெரியார் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா? எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.**

ஆம் நடக்கிறது. அவர் போராடிப் பெற்றுத்தந்த இட ஒதுக்கீட்டில்தான் அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

அவரின் முயற்சியால் தான் பெண்களுக்குச் சொத்துரிமை கிடைத்துக்கொண்டு உள்ளது.

**கேள்வி 04 :**

*தொண்டு செய்து பழுத்த பழம்*
*தூய தாடி மார்பில் விழும்*
*மண்டை சுரப்பை உலகு தொழும்*
*மனக்குகையில் சிறுத்தை எழும்*
*அவர்தாம் பெரியார் - பார்*
*அவர்தாம் பெரியார்*

புரட்சிக்கவி பாரதிதாசன்

புரட்சிக்கவிஞரின் இயற்பெயர் கனகசுப்பு ரத்தினம். பாரதியார் மேல் இருந்த பற்றால் பாரதி தாசன் என பெயர் மாற்றிக்கொண்டார்.இவருக்கு பெரியார் அவர்கள் "புரட்சிக்கவிஞர்" என்று பட்டம் கொடுத்தார்.

*1891 - ஏப்ரல் 29 - பிறப்பு*

*1964 - ஏப்ரல் 21 - இறப்பு*

பெரியாரைப் பற்றி இவர் எழுதிய கவிதையே "தொண்டு செய்து பழுத்த பழம்".புரட்சிக்கவிஞர் -தந்தைப் பெரியாரின் கொள்கைகளை, கருத்துக்களை, தத்துவங்களை யெல்லாம் தன் கவிதை வரிகளால் மக்கள் மத்தியில் பரப்பியவர். பெரியாரின் சிந்தனைகள் தான் இந்த உலகம் பின்பற்றும் என்று பாடியவர்.



மு.சி.அறிவழகன்

# பயணம்

ஏழை முதல் பணக்காரர் வரை அனைவருமே ஏதேனும் ஒரு இடத்தை (இலக்கை) நோக்கிப் பயணித்துகொண்டே தான் இருக்கின்றோம்! நாம் பார்க்கும் இரண்டு வகையினருக்கும் இடையே பயண உத்திகள் மட்டும் மாறும். பேருந்துப் பயணத்தில் துவங்கி இரயில், விமானம் என தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது...

"கால்கடுக்க பொழுதுக்கும் வெயிலில் உழைப்பவன் நின்றே பயணிக்கிறான். காற்றோட்டமாகச் செயற்கைக் காற்றில் வேலை செய்பவன் படுத்து உறங்கும் நிலையில் பயணிக்கிறான்." பொருளாதாரத்தில் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் மேலே மட்டத்தில் இருப்பவர்களைப் பார்த்தால் வியப்பு. ஆனால், பொருளாதாரத்தில் மேல் மட்டத்தில் உள்ளவர்களுக்கு கீழ் மட்டத்தில் உள்ளவர்களைப் பார்த்தால் அசிங்கம் இது இன்றைய நிலை...

ஒவ்வொரு துறையாகச் சென்றுபார்த்தால் கண்ணீருக்கு பஞ்(மிச்)சமில்லை :-

## தொடர்வண்டி பயணம்

பெயரோ தொடர்வண்டிப் பயணம்!

பயணமோ தொலைதூரம்! தகுதிக்கு ஏற்ற பிரிவா! இல்லை தேவைக்கு ஏற்ற பிரிவா? புரியவில்லை ..!

### முதல் வகுப்பு

செயற்கைக் காற்றோடுப் படுத்துச் செல்லும் வசதி 20 பெட்டிகள்!

### இரண்டாம் வகுப்பு

முன்பதிவு இயற்கைக் காற்றோடுப் படுத்துசெல்லும் வசதி 30 பெட்டிகள்.

### மூன்றாம் வகுப்பு

திடீர் பயணம்! திட்டமிடா பயணம் அனைத்துமே இங்கே தான் நடக்கும்! மேலே, குறிப்பிட்ட இரண்டு வகுப்பிலும் நாம் பேசவும் ஒன்றுமில்லை அவர்கள் பேசிக்கொள்ளவும் ஒன்றுமில்லை! இங்கே பேசாமல் இருக்க ஒன்றும் இருக்காது! பேசினால் பயனும் இருக்காது.

அந்த நொடி பரபரப்புக்கு அளவே இருக்காது. டிக்கெட் எடுப்பதுமுதல் தொடர்வண்டியில் இருந்து வெளியே வரும் வரை...

மொத்தம் 4 பெட்டிகள் தான் ஆனால், 10 பெட்டியில் பயணம் செய்யும் அளவு நான்கே பெட்டியில் பயணிப்பார்கள்! வியர்வை நாற்றம் ஒருபக்கம், பல மொழிகள் ஒருபக்கம். கால் வைக்கவும் இடம் இருக்காது. தங்கள் உடமைகளை வைக்க வேண்டிய இடத்தில் மூன்று நபர்கள் அமர்ந்து இருப்பார்கள். இந்தி, கன்னடம், தமிழ் என அனைத்து மொழிகளும் ஒட்டி உரசிப் போகும் காட்சி பல வலிகளைத் தந்தாலும் பிரிவு இல்லா பாகுபாடு இல்லா உணர்வைக் கொடுக்கும். சில சமயங்களில் பயணம் முழுமையும் நின்றுகொண்டே பயணிக்க நேரிடும். அப்போது தோன்றும் இரயில்வே நிர்வாகம் செயல்படுகிறதா..? என்று...

சரி என்று நிலையம் மாறிப் பேருந்து பயணம் போவோம்!

இதிலும் பாகுபாடு உண்டு ஆனால், சிறு வித்தியாசம் தனித்தனிப் பேருந்து. ஆனால், அரசாங்கப் பேருந்து மட்டுமில்லை தனியார் பேருந்தும் உண்டு அவர்களைப் பற்றி நாம் பேச ஒன்றும் இல்லை, அவர்கள் முதலீடு!

அரசால் சில பேருந்துகள் இயக்கப்படுகின்றது எதற்கு இயக்குகிறோம் என்று தெரியாமலே இயக்கப்படுகிறது என்று தான் சொல்ல வேண்டும். மழைக்காலம் என்றால் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. வெளியே நனைவதும் பேருந்தின் உள்ளே நனைவதும் ஒன்றே! மேடு பள்ளத்தில் செல்லும்போது அமர்ந்து இருக்கும் சீட்டை விட்டு 1 அடி மேலே கீழே சென்று வருவது வாடிக்கை. ஆனால், இதே பயணத்தில் மனிதநேயத்தையும் காண முடியும். கர்ப்பிணி பெண், கைக்குழந்தை கொண்டுவரும் பெண், வயது முதிர்ந்தோர் வந்தால் இடம் கொடுத்தால் மனிதம் இருக்கும் என்று சொல்லலாம் இல்லாத போது எப்படிச் சொல்ல முடியும்...?

அரசாங்கம் நமக்கானப் பயணத்தை இலவசமாகக் கொடுக்கவில்லை! இருந்தும் ஏன் முறையானப் பயணத்தை அமைத்து கொடுப்பது இல்லை! அறிந்த வரை இந்தியாவை தவிர மற்ற நாடுகளில் இதுபோல பயணப் பிரச்சனைகள் வருவது இல்லை...!

"பயணங்கள் மாறும், திட்டங்கள் மாறும், பணிகள் மாறும், ஏழைக்கும் பணக்காரனுக்கும் பசி மாறாது என்பதை அரசாங்கம் புரிந்து நடந்துகொள்ள வேண்டும்." ●




▪ மார்ச் 15 – உலக நுகர்வோர் தினம். உலக ஊனமுற்றோர் தினம்.

# தேர்தல் ஜனநாயகம்

18 வயதைக் கடந்த அனைவருக்கும் வாக்குரிமையைத் தந்துள்ளது இந்திய அரசியல் சட்டம். ஐந்தாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தத் தேர்தலில் இந்திய மக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்துத் தங்களுக்காக நல்லது (வேலை) செய்யும் (வேலைக்காரனை) தலைவனைத் தேர்ந்தெடுக்கும் நாள். அந்த நாளில் மக்கள் செய்யும் அந்த வேலையை சரியாகச் செய்கிறார்களா? என்றால் இல்லையென்பது பல நேரங்களில் விடையாகக் கிடைத்துள்ளது. என்றும் சரியோ! தவறோ! மக்கள் அளித்த தீர்ப்பை மதிக்கின்றோம், அதை அப்படியே தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறோம் என்று அந்தந்தத் தேர்தலில் நாங்கள் உங்களுக்கான தலைவர்கள், உங்களுக்காக அல்லும் பகலும் அயராதுழைக்க வந்த மாமணிகள் என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக்கொண்டு வேட்பாளர்களாக தேர்தலில் நின்று தோற்றுப் போனவர்கள் பேசும், பேசிய வசனத்தையெல்லாம் கேட்டோம், இப்போதும் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அப்படியென்றால் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் கிடைத்த பதில்களுக்கு உண்மையான பொறுப்பாளி வாக்காளர்கள்தானா? அவர்கள் மேல் இந்தப் பொறுப்பை, பழியைப் பொதுவாகச் சுமத்திவிட்டு அமைதியாக கடந்து சென்றுவிடலாமா? அவ்வாறு செய்தால் அது சரியா?

ஆம் அதற்கும் காரணம் மக்கள்தான் என்று நாம் சொல்வோமேயானால், நாம் இன்னும் முட்டாள்கள் என்று சொல்வதைத்தவிர வேறுவழியில்லை. ஆனால்! நாம் அவ்வாறு முட்டாள்களாகவே இருப்பதற்கு நாம்தான் பொறுப்பாளியா? என்றால் நிச்சயம் இல்லை. காரணம் இப்படி நம்மை முட்டாள்களாகவே வைத்திருக்க நம்மை ஆண்டவர்கள், நாமெல்லாம் தலைவர்கள் என்றும்! ‘‘நம்மையெல்லாம் இவர்கள்தான் காப்பார்கள்’’ என்று நம்பிக்கை வைத்து இன்றும் தலைவா! தலைவா! என்று, கோசம் போட்டுக் கொண்டிருக்கின்றோமே! அவர்கள்தான் காரணம் என்பதை நாம் எப்போது உணர்ந்தோம்! அல்லது உணர்வோம். ‘‘ஆம் இதற்குக் காரணம்’’ நம்மை ஆட்சி செய்த அரசியல் தலைவர்கள் மட்டும்தான் என்று சொல்வோமா! ஏனென்றால் “அவர்களிடம்தானே உச்ச பட்ச அதிகாரம் உள்ளது” என்று சொல்லி அவர்களைப் பொறுப்பாளிகளாக்கி விடலாமா? அவ்வாறு செய்தால் அதுவும் சரியா? நாம் தேர்ந்தெடுத்ததாகச் சொல்லி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தமர்ந்தவர்களிடம்தான் நாம் நினைக்கின்ற



**இன்றைய தேதியில் இங்கே தேர்தல் என்ற ஒன்று நடப்பதே மிகப்பெரிய கேலிக்கூத்தாக உள்ளது. அதன் காரணமாகத்தான் பல அமைப்புகள் தேர்தலில் பங்கேற்பதுமில்லை, வாக்களிப்பதுமில்லை. பொதுவாக அவர்களுக்கு தேர்தல் ஜனநாயகத்தின் மீதே நம்பிக்கையில்லை.**

அல்லது சொல்கின்ற அந்த அதிகாரம் உள்ளதா? இல்லை, அப்படியென்றால், அப்போ அந்த அதிகாரம் உண்மையில் யாரிடம்தான் உள்ளது.

''நம் நாடு நல்லரசாக இல்லாமல்! வல்லரசாக ஆக வேண்டும்! என்ற குரல் அடிக்கடி கேட்குமே! அதுபோல் உலகில் நல்லரசாக இல்லாமல், வல்லரசாக உள்ள அதிகாரத்தின் உச்சியில்! அதன் திமிரில்! எதற்கும், யாருக்கும் கட்டுப்படாமல் "பெரியண்ணன்" என்ற மனப்பான்மையில் உள்ள நாடுகளும், அதுபோன்ற நாடுகளின் தலைவர்களின் மிரட்டல்களுக்கும் உருட்டல்களுக்கும் அவர்கள் "கையில் கோல் வைத்திருக்கின்ற குரங்காட்டி என நினைத்து, பயந்து மிரள்வதும், உருள்வதோடு, மட்டுமல்லாமல் கூடவே" இந்தியாவில் தொழில் செய்யும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளிடமும் பயந்து கூனிக்குறுகி நடக்கின்ற நமது தலைவர்களைப் பார்க்கும்போது, அதிகாரம் யாரிடம் உள்ளது! நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லி கோட்டைக்குச் சென்றவர்களிடம்தான் அந்த அதிகாரம் உள்ளது. அவர்கள்தான் நமக்காக வேலை செய்வார்கள்! என்று, இவர்களிடம் அதை எதிர்பார்ப்பது எவ்வளவு பெரிய தவறு என்பது நமக்குப் புரியும்.

இன்றைய தேதியில், இங்கே தேர்தல் என்ற ஒன்று நடப்பதே மிகப்பெரிய கேலிக்கூத்தாக உள்ளது. அதன் காரணமாகத்தான் பல அமைப்புகள் தேர்தலில் பங்கேற்பதுமில்லை, வாக்களிப்பதுமில்லை. பொதுவாக அவர்களுக்கு தேர்தல் ஜனநாயகத்தின் மீதே நம்பிக்கையில்லை. அதற்குள் நியாயம் இல்லையென்று அதை அப்படியே ஒதுக்கிவிடவும் முடியாது. இன்றைய இந்த தேர்தல் நடைமுறைகளும் அதன் விதிகளையும் பார்த்தால்,

''இந்தியா என்பது பல்வேறு மாநிலங்களில் வாழும் தேசிய இனங்களின் கூட்டு" அல்லது ஒன்றியம். அதன் சட்டப்படி, சடங்குப்படி, சம்பிரதாயப்படி 18 வயதை அடைந்த ஒவ்வொரு நபரும் தவறாமல்வாக்களிக்க வேண்டும். அவ்வாறு வாக்களிக்கும் முன்! நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் உரிமையோ, அதிகாரமோ, எந்த சாதாரணக் குடிமகனிடம் உள்ளது. நம்மில் ஒருவராக! நம்மோடு நமது இன்ப துன்பங்களில் பங்கேற்று! இவர் நமக்கானவர் இதுபோன்றவர்கள் நமக்கானத் தலைவர்களாக வந்தால், இவர்களுக்கு நம்மைப்பற்றித் தெரியும். நமது பகுதியில் நாம் வாழும் நமது சுற்றிடங்களில் என்ன பிரச்சனை என்று தெரிந்து அதற்கேற்றாற்போல் செயல்படுவார்கள். ஆகவே நம்மில் ஒருவரை நாம் நமக்கானத் தலைவரை தேர்ந்தெடுக்க நடைபெறும் இந்தத் தேர்தலில் நாம் ஒரு வேட்பாளரை நிறுத்துவோம் என்கின்ற நிலை நாட்டில் ஏதாவது ஒரு மூலையில் இருக்கின்றதா? ஆம் இருக்கின்றது, என்று "தலைவர்" என்று சொல்லிக்கொள்ளும் யாரையாவது சொல்லச் சொல்லுங்கள். முடியுமா? யார் யாரோ வருவார்கள். நான்தான் உங்களுக்கான வேட்பாளர் என்பார்கள். அல்லது மாநிலக் கட்சியின் தலைவரோ, தேசியக் கட்சியின் தலைவரோ வருவார்கள்! இவர்தான் உங்களின் வேட்பாளர்! ''இவரை நீங்கள் வெற்றிப் பெறச்செய்தல்'' இவர் உங்களுக்காக மாடாய் உழைப்பார், ஓடாய் தேய்வார் என்றெல்லாம் வசனம் பேசியதை நம்பி நாமும் வாக்களிப்போம்.

தேர்தல் முடிவுகள் வரும்! ''அப்போ பார்த்தால் வேறு ஒரு கட்சி ஆட்சி அதிகாரத்தில் அமரும்'' என்னடா இது! ''நாம் வேறு ஒருவருக்கு வாக்களித்தால் இங்கே வேறு ஒருவர் அல்லது வேறு ஒரு கட்சி ஆளுகின்ற உரிமையைப் பெற்றுள்ளதே" அதெப்படி என்று நினைத்தால்! ஆரம்பத்தில் கள்ள ஓட்டுப் போட்டார்கள். அப்போது இந்த அறிவுக்கொழுந்துகள் செய்த கேலிக்கூத்து என்னவென்றால்! தங்களின் விருப்பப்படி கணக்கில்லாமல், கள்ள ஓட்டுப் போட்டதால் அந்தத் தொகுதியில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக வாக்குப் பதிவு நடைபெற்று நாட்டு மக்கள் கைக்கொட்டி சிரித்த



கதைகளும் உண்டு. இல்லையேல் வாக்குப்பெட்டியைத் திருடுவது, அதுவும் இல்லையேல் இவர்களுக்கு எதிராக மக்கள் வாக்களிப்பார்கள் என்று ''இவர்கள் நினைக்கின்ற வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு நடைபெறும் இடத்தில் தகராறு செய்து வாக்குப்பதிவு நடைபெறாமல் தடுப்பதும், அதுவும் இல்லையேல், அதிகாரத்தில் இருந்தபோது மக்களுக்கு எதுவும் செய்யாமல் நாம் செய்த அயோக்கியத் தனங்களுக்கு மக்கள் நிச்சயம் வாக்களிக்க மாட்டார்கள் என்ற நிலை வரும்போது அடித்தக் கொள்ளையில் வந்தப் பணத்தை வாக்குக்குக் கொடுத்து வெற்றி பெறுவோம். "இந்தச் செயலின் மூலம் மக்களையும் குற்றவாளிகளாக்கிவிடலாம்" என்று செயல்படும் இந்த அரசியல்வாதிகளின் செயல்கள்.

சரி! நாம் ஒரு தலைவரை நினைத்து வாக்களித்ததைப்போல் மக்கள் அனைவரும் அதேக்கட்சி அல்லது அந்தத் தலைவரே நாட்டை ஆள வேண்டுமென்று வாக்களித்திருக்க வேண்டுமல்லவா? ஆகவே பெரும்பான்மையான மக்கள் நாம் ஓட்டுப்போட விரும்பாதவரை அவர்கள் ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்று நினைத்தால் அதுவும் இல்லை. 2014 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய அளவில் பதிவான மொத்த வாக்குகளில் 69 விழுக்காடு ஓட்டு தங்களுக்கு எதிராகவும், வெறும் 31 விழுக்காடு ஓட்டு மட்டுமே தங்களுக்கு ஆதரவான வாக்கைப்பெற்ற ஒரு கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறதே அது எப்படி? ஏன் என்று கேள்வி கேட்டால், அதுதான் இந்தியாவின் தேர்தல் முறை என்கிறார்கள். தேர்தலில் பங்கேற்று எந்தக் கட்சி அதிக வாக்குகளைப் பெறுகிறதோ அதுதான் தேர்ந்தெடுத்த இந்திய ஜனநாயகத் தேர்தல் முறை! அதுதான் இந்த நாட்டின் மக்களுக்கும், மக்களின் எண்ணங்களுக்கும் மதிப்பளிக்கும் முறை'' என்றெல்லாம் சொல்லுகிற நடைமுறை உள்ளதென்று சொல்லுகின்றபோது,

பெரும்பான்மை மக்களின் வாக்கைப் பெறாத ஒரு கட்சி, எப்படி ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியும்? இல்லை அதுதான் இந்திய தேர்தல் முறை என்றால் அப்போ மக்களின் உரிமைக்கு அவர்களின் ஓட்டுக்கு என்ன மரியாதை? பிறகு, எதற்கு இந்தத் தேர்தல்? இதில் ஏதோ தவறு இருக்கிறதென்றால் அதை மாற்றுவதுதானே சரியாக இருக்கும். ஆம்! அதை மாற்ற வேண்டும். யார் மாற்றுவார்களென்றால், தப்பான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களால்தான் முடியுமாம். இவர்கள் எப்படி மாற்றுவார்கள் பாருங்கள்.

சரி இது போய்த்தொலையட்டும். நம் பகுதியில் வெற்றி பெற்ற நமது பிரதிநிதி நமக்கானத் தேவைகளை இந்தப் பகுதியின் குறைகளை நிவர்த்தி செய்வார் என்று பார்த்தால்! தொகுதிப் பக்கமே வருவதில்லை. அப்படியே என்றாவது ஒருமுறை நம்ம தொகுதி வழியாக எங்கேயாவது செல்லும்



▪ மார்ச் 18 – இந்திய தளவாடங்கள் தினம்.

போது வழியில் மடக்கிப் பிடித்து மக்கள் கேள்வி கேட்பார்கள். ''நீங்கள் தொகுதிப் பக்கமும் வருவதில்லை, எந்த நல்லதும் இதுவரை செய்ததில்லை. ஆனால் எங்களுக்கு கெடுதல்களை உண்டு பண்ணுகின்ற திட்டங்களையாவது வராமல் இருக்கும் படி செய்திருக்கக் கூடாதா? குறைந்தபட்சம் அதை எதிர்த்தாவது குரல் கொடுத்திருக்கக்கூடாதா என்று கேட்டால்'' ''அது நான் சார்ந்த கட்சி என்ன முடிவு எடுக்கிறதோ அதை மீறி என்னைப்போன்றவர்களால் ஒன்றும் செய்ய முடியாது'' என்கிறார்கள் நமக்கானத் தலைவர்கள். ''அய்யா,'' ''உங்க கட்சி தலைமை அல்லது தலைவர் என்ன வேண்டுமானாலும் முடிவு செய்யறது ஒரு பக்கம் இருக்கட்டும்'' இந்த தொகுதி மக்களுக்கெல்லாம் நீங்கதானே தலைவரு. உங்களை நம்பித்தானே நாங்களெல்லாம் உங்களுக்கு ஓட்டுப்போட்டோம் நீங்க இந்த மக்களுக்கான தலைவர்தானே உங்களைப்போன்ற மக்கள் பிரதிநிதிகளின் தலைவர்தானே உங்கள் கட்சியின் ஆட்சியின் தலைவர், அவர் இதுபோன்ற அனைத்து மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளைக் கேட்டு அதன் மூலம் மக்களின் தேவைகளை அறிந்து அதைப் பூர்த்தி செய்வதைத் தவிர்த்து தனியாக, அதென்ன கட்சி, தலைவரின் கொள்கை தலைவரின் விருப்பம் அதன் படிதான் நீங்கள் செயல்படுவீர்கள் என்றால் அது தலைகீழாக இல்லையா? என்கின்ற இதுபோன்ற கேள்விகளுக்குப் பதிலேதுமில்லை. இதுபோன்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதன் தலைமையின் செயல்பாடுகளும் இவ்வாறு இருக்கும்போது இந்த தேர்தல் ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை வரும். சரி வரும் தேர்தலில் நாம் ஓட்டே போடக்கூடாது என்று நினைத்தால்! ஓட்டுப் போடாதவர்களைப் பற்றியெல்லாம் இந்தத் தேர்தல் ஜனநாயகத்தில் கவலையில்லை. ''ஓட்டுப் போட்டவர்களில் பெரும்பான்மை வாக்கைப் பெற்றவர்கள் நாட்டை ஆள்வார்கள் என்கிறார்கள். அதான் குறைவான வாக்கைப் பெற்றவர்கள்தானே தொகுதியில் அதிக எண்ணிக்கைப் பெற்று ஆள்கிறோம் என்கிறார்கள். இது என்ன கேலிக்கூத்து!

சரி இந்த தேர்தல் முறை இருக்கின்ற வரை இதில் நமக்குப் பிடித்தவர்களை இதே முறையில் தேர்ந்தெடுப்போம் என்றால் அப்படியும் விட்டுவிட மாட்டோம் எங்களுக்கு எதிராக வாக்களித்தாலும், அதையெல்லாம் எங்களுக்கே அனைத்து வாக்குகளும் பதிவாகும்படி ஓட்டு எந்திரத்தையே மாற்றும் வித்தை எங்களிடம் உள்ளது. நாங்கள் மக்களைப் பற்றியெல்லாம் கவலைப் படுகிற, அவர்களுக்கு ஏதாவது கொஞ்சமாவது, நல்லது செய்வோம் என்று மறந்தும் செய்கிற அல்லது நினைக்கின்றவர்கள் நாங்கள் இல்லை. அதேபோல் நீங்கள் ஓட்டுப் போட்டுத்தான் வெற்றிபெற வேண்டும் என்கின்ற அவசியமும் இல்லை என்கின்ற கூட்டங்கள், அரசியலில் நாங்கள் மக்களுக்கானத் தலைவர்கள்! என்று நாட்டில் வேசம் போட்டு சுற்றிக் கொண்டிருக்கும்போது அப்பாவி பொதுமக்கள் அனைவரும் என்ன செய்வது.!

நல்லவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்து ஆட்சிக்கு வந்து இந்த மக்களுக்கு தேவையானதை செய்யும் அரசியல் சூழ்நிலை வருவது எப்போது? அது தானாக நடக்குமா? நடக்காது அதற்கான வழியைத் தேடுவோம் தப்பானவர்களை திருத்தவெல்லாம் முடியாது. ஏனெனில் அதிகாரத் திமிர் உள்ளவர்களை ஏதுமற்ற அப்பாவி மக்களால் என்ன செய்ய முடியும். சரியான அதிகாரம் மக்கள் கையில் இல்லாதவரை அதைப்பெறும் வழியைக் காண்போம் அதைப் பெறும்வரை போராடுவோம்... ●

# எழுத்தெனப்படுவது

கிழிந்த ரவிக்கைக்குள்குவிந்து கிடக்கும் இளம்பெண்ணின் வனப்பைப்பார்த்து வெறியேறுகிறது காமுகம்! அதன் வழிவெளிப்படும் வறுமையைப்பார்த்து நிலைகுலைந்து பதறுகிறது கவிமனம்.

வெறிக்கும் – உணர்வுக்கும் இடைப்பட்ட வேறுபாடு அங்குதான் வேரூன்றிக் கிடக்கிறது.

காட்சி ஒன்றே! இருவர் கண்களும் கூட ஒன்று போன்றே. ஆயினும் வேறுபாடு!

கவிமனத்தின் பெருமை சிறுமைகளை பிரதிபலித்து நிற்பன அவன் கவிதைகளே! அவனது சிறுமைக்கும் ஏனைப் பெருமைக்கும் அக்கவிதைகளே கட்டளைக்கல்.

வசந்தவல்லி பந்தாடும் அழகை எடுத்துரைக்கும் கவிஞன்

''கோடு பொருமுலைமூடு சலவையின் ஊடுமல்லாடும் காட்சியை வடிவமைப்பார். கவிதையை ருசிக்க முனையும் மனப்பந்தை மறக்கவும் பந்தாட்டத்தைப் புசிக்கவும் கூடிய மனநெருக்கடிக்கு ஆளாகாமல் தப்பிட முடியுமா?

இதற்கு நேரெதிராய் துய்ப்பவனை உன்னதத்தின் உச்சிக்குக் கொண்டு செல்லும் சொல்லோவியங்களுக்குப் பஞ்சமில்லை.

சித்திரச் சோலைக்குள்நுழையும் பாரதிதாசன் அதன் பேரழகைக் கண்டு பிரமித்து நிற்கும் வேளையில் திடீரென அப்பேரழகின் ஆணிவேரை நோக்கிப் பயணப்பட்டு விடுவார். அக்கணங்களில் அவன் கண்முன் நிற்கும் பெரும் மரங்கள் பூச்செடிகளும் கிளை மரங்களும் கானகமும் மனவெளியை விட்டு மறைந்தே போகின்றன. மறுநொடியும் உணர்வு பொங்க அந்த ஒட்டுமொத்த சோலையோடும் உரையாட ஆரம்பிக்கிறார்.

*''சித்திரச் சோலைகளே*

*உமை நன்கு திருத்த இப்பாரினிலே*

*எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ*


*உங்கள் வேரினிலே''* என்று முடிப்பதற்குள்

ஒவ்வொரு வார்த்தைகளும் ஊடுருவிப் பாயும், வெப்பத்தின் அளவையும் வேதனையின் அவலத்தையும் எந்தக் கருவியால் அளவிடுவது!

உலகின் ஆக்கங்கள் ஒவ்வொன்றின் அறிவிலும் உழைக்கும் பலகோடி மக்களின் வியர்வையும் ரத்தமும் உயிரும் கலந்தே காலவெளியை நிரப்பியிருக்கின்றன.

சோலைகள்! சாலைகள்! மலையின் மார்பைப் பிளந்து மலைப்பாம்பாய் நெளியும் பாதைகள்,

நாகை பாலு



# குமுறும் கவிமனம்



ஆலைகள், சிலைகள் நெடுநதிக்குறுக்காய் பேரணைகள் நெடுவயல் முழுவதும் மரகதப்பாய்கள்; விண்கலங்கள் வேற்றுக்கிரகத்தை ஆய்வு செய்யும் ஆயவகங்கள் என்று எதுவாகட்டும் எல்லாம் வியர்வையின் விளைச்சல். வெந்தும் நொந்தும் வினையாற்றி மடிந்த இலட்சோபலட்சம் தலைமுறையில் உழைப்பில் மட்டுமல்ல இழப்பிலும் வளர்ந்தவை!

படர்ந்த புவிபரப்பின் அடர்ந்து கிடக்கும் ஆலைகளை சோலைகளை ஆயிரங்கோடி கட்டிடங்களாய் பார்த்து பாரதிதாசன் கேட்பார்

“நீங்கள் ஊர்த்தொழிலாளர் உழைத்த உழைப்பினால் உதித்தது மெய்யல்லவோ? என்று.

நீர்கனல், காற்று நல்ல நிலவெளி என நிறைந்த இயற்கையைக் கவர்ந்திழுக்கும் எதுவாயினும் அது உழைப்பின் வெளிப்பாடல்லவோ?

நெல்லினை நன்னிலமோ, நீரலைத் தடாகங்களோ மாமிகு பாதைகளோ மலையுச்சி நகரங்களோ எவையேயாயினும்அவையெல்லாம் கூட்டுழைப்பில் கொட்டப்பட்ட குருதியின் விளைச்சலன்றோ?

பரந்த இவ்வுலகின் ஒவ்வொருவருக்கும் பாமர உழைப்பின் காட்சிகள் அல்லவா?

ஆயினும் உழைத்தவன் நீயே?

பசிதீரும் என்று அடிவயிற்றையும் பிசைந்து நின்ற அவனுக்கு உறிஞ்சிய செல்வேந்தர் உரைக்கும் பதில்எது தெரியுமா? உயிர் போகும் என்பதே.

பணி செய்து கிடப்பதே உன் வேலை! பயன் கேட்டு நின்றால் உயிர்போகும், ஜாக்கிரதை!

ஆண்டாண்டு காலமாய் ஆண்டவனுக்கும் வேண்டுபவனுக்கும் இடைப்பட்ட உரையாடல் இதுதான்.

**சித்திரச் சோலைக்குள்நுழையும் பாரதிதாசன் அதன் பேரழகைக் கண்டு பிரமித்து நிற்கும் வேளையில் திடீரென அப்பேரழகின் ஆணிவேரை நோக்கிப் பயணப்பட்டு விடுவார். அக்கணங்களில் அவன் கண்முன் நிற்கும் பெரும் மரங்கள் பூச்செடிகளும் கிளை மரங்களும் கானகமும் மனவெளியை விட்டு மறைந்தே போகின்றன.**

கடமையைச் செய்! பயனை பாராதே!

வசதியாகக் கட்டமைக்கப்பட்ட வக்கணை!

மானம், வெட்கம், சூடு, சொரணை, கற்பு எனப்படும் கற்பித்தல்களின் வரிசையில் பணி செய்து கிடப்பதே என்கடன் என பட்டியலிடப்படுவதே நரிகளின் தந்திரம்!

பாரதிதாசன் இறுதியாக எழுப்பும் கேள்வி இதுதான்.

எலிகள் புசிக்க/ எல்லாம் கொடுத்தே ஏறுகள் ஏங்கிடுமோ?

புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே புதரினில் தூங்கிடுமோ?

கேள்வியோடு நிறுத்தாமல் கிளர்ந்தெழும் நியாயத்தைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார்.

“கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவாய் – இனி

கெஞ்சும் உத்தேசமில்லை!

சொந்த வலியுடையோர் – இன்ப வாழ்வுடையார்

வார்த்தைக்கு மோசமில்லை!” •



▪ மார்ச் 21 – உலகக் காடுகள் தினம். உலக வனவிலங்குகள் தினம். நிறவெறி ஒழிப்பு தினம். இரவும் பகலும் சரி சமமாக உள்ள நாள்.



# காதலுக்கு இணையேதுமில்லை

## காதலர் தின வரலாறு

மன்னர்கள் என்பவர்கள் பல ஆயிரம் மனைவிகளைத் திருமணம் செய்தும், திருமணம் செய்யாமலும் பெண்ணடிமையின் தளகர்த்தாவாக இருந்து கொண்டு அவர்களை அந்தப்புரங்களில் அடிமை போல அடைத்து வைத்துக்கொண்டு ஊருக்கு உபதேசம் செய்யும் பல நாடுகளில் வாழ்ந்த மன்னர்களின் மனநிலைக்கு ரோமானிய நாட்டு மன்னனும் விதிவிலக்கல்ல, ரோமானிய நாட்டில் இரண்டாவது கிளாடிஸ் *II* என்கிற மன்னனது ஆட்சிக்காலத்தில் நாட்டில் இனி எந்த ஆணும் திருமணம் செய்யக்கூடாது என்கிற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. திருமணம் செய்தால் ஆணின் வீரம் குன்றிவிடும் இதனால் மன்னனின் படை பலம் இழந்து விடும் என்ற காரணத்தினால் இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக கூறிய மன்னன் இந்த விதிகளை மீறுபவர்கள் சிரச்சேதம் செய்தான் இந்த மிரட்டலை பொருட்படுத்தாமல் விதிகளை மீறிய வாலண்டைன் என்பவர் மன்னனுக்குத் தெரியாமல் ரகசியமான முறையில் திருமணங்களை நடத்தி வைத்தார். இதனை அறிந்த மன்னன் வாலண்டைனை சிரச்சேதம் செய்ய கட்டளையிட்டு சிரச்சேதம் செய்யும் வரை சிறையில் அடைத்தார்.

இதற்கிடையே சிறையில் அடைபட்டிருந்த காலத்தில் சிறைக்காவலரின் பார்வை இழந்த மகள் அஸ்டோரியசுக்கு வாலண்டைன் மீது காதல் ஏற்பட்டது. இதனால்தான் என்னவோ காதலுக்கு கண்ணில்லை என்ற இயல்பான சொல் தோன்றியிருக்கக்கூடும். வாலண்டைன் - அஸ்டோரியஸ் காதலுக்கிடையில் வாலண்டைனை சிரச்சேதம் செய்யும் நாள் வந்தது. கிபி 270 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 நாள் வாலண்டைன் சிரச்சேதம் செய்து கொல்லப்பட்டார். அதன் பின்னர் 200 ஆண்டுகள் கழித்து 49 வது போப்பாக பதவியேற்ற ஜெலாசியுஸ் என்பவர் வாலண்டைனைப் புனிதராக அறிவித்தார். அதன் பின்னரே உலகம் முழுவதும் பிப்ரவரி 14ஆம் நாள் வாலண்டைன் தினம் என்ற காதலர் தினமாக கொண்டாடப்படுவதாக பெரும்பாலான ஆய்வுகள் மூலம் தெரிகிறது. சாதிகளையும் மதங்களையும் உடைத்தெறிந்து சமத்துவமான வாழ்வை கட்டமைக்கும் காதலைக் கொண்டாட உலகம் முழுவதும் ஒரு தினம் கடைப்பிடிக்கப்படும் போது நாமும் அதை தொடர்வதில் பெருமை கொள்கிறோம்.

## காதலும் மதமும்

காதல் மதத்தையும் சாதியையும் தகர்த்து உடைத்து விடுவதாலேயே மதவாதிகளுக்கும்,சாதிய பற்றாளர்களுக்கும் ஏனைய விவகாரங்களை விடவும் காதல் விவகாரங்களில் கூடுதலாக அக்கறை செலுத்தி தங்களது எதிர்ப்பை வன்முறை வடிவில்கூட வெளிப்படுத்துகின்றனர்.

ருக்மணி உள்ளிட்ட எட்டு மனைவியர் உட்பட 16008 மனைவியுடன் வாழும் கிருஷ்ணன் இவர்கள் எல்லோரையும் விடுத்து, ராதா என்பவரைக் காதலித்தார். அந்தக் காதல் புனிதமானது என நம்புவதினாலேயே இன்றும் நம்மூரில் பலர் ராதாகிருஷ்ணன் என்று பெயர் கூட சூட்டி மகிழ்ந்து கொள்கிறார்கள். பல ஆயிரம் மனைவி இருக்க மற்றொரு காதல் செய்த கிருஷ்ணன் மீதெல்லாம் வராத எதிர்ப்பு சமகால மனிதர்கள் மீது வருவதற்குக் காரணம் என்ன? தங்களின் அடித்தளமான மதத்தையும், ஜாதியையும் காதல் உடைத்து விடும் என்கின்ற பயம் தானே தவிர வேறு ஒன்றுமில்லை.

காதலர் தினம் கொண்டாட எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் சொல்லும் மற்றொரு காரணம் அது மேற்கத்திய கலாச்சாரம். பிறந்தநாளுக்கு கேக் வெட்டுவது, ஆங்கில புத்தாண்டுகளை மது விடுதிகளிலும், கேளிக்கை விடுதிகளிலும் கொண்டாடுவது போன்ற செயல்களிலெல்லாம் மேற்கத்திய கலாச்சாரம் கண்களுக்கு புலப்படுவதில்லை! பிறந்தநாளுக்கும்,

**ஆகவே இவர்களின் நோக்கம் சாதி மதக் கலப்பு மணம் கூடாது என்பதுதானே தவிர மற்றபடி கலாச்சாரப் பாதுகாப்பு என்பதெல்லாம் இல்லை. இன்றும்கூட இடைநிலை சமூகத்திற்குள் நடைபெறும் காதல் திருமணங்களைக் கலப்பு மணம் எனக்கூறி நாங்களும் சாதி மறுப்புத் திருமணம் என்பதை ஏற்பவர்கள் தான் என்று பேசுகிறார்கள்**

ஆங்கிலப் புத்தாண்டுக்கும் இல்லாத எதிர்ப்பு காதலர் தினத்திற்கு எழுவதற்குக் காரணம் மதமடமை தானே தவிர வேறு ஒன்றும் இல்லை.

## காதல் ஒவ்வாமை

முன்பெல்லாம் மழை பெய்ய வேண்டுமென்றாலோ அல்லது இடைவிடாது பெய்யும் மழையை நிறுத்தவோ நாய்க்கு, கழுதைக்கு, ஓணானுக்குத் திருமணம் செய்து வைப்பது என்றிருந்த மதவாதிகளின் மூடத்தனம் இப்போது இன்னும் சற்று முற்றிப்போய் காதலர் தின எதிர்ப்புக்கு காதலர் தினத்தன்று நாய்க்கும் கழுதைக்கும், ஓணானுக்கும் தவளைக்கும் திருமணம் செய்து வைப்பது என தங்களது மூடத்தனமான மனநிலையைப் பொதுவெளிக்கு வெளிப்படுத்துகின்றனர். இதன் மூலமாக மனிதர்கள் தங்களது சாதியையோ, மதத்தையோ விடுத்து காதல் திருமணம் செய்வதை எந்தளவிற்கு இவர்கள் கொச்சைப் படுத்துகின்றனர் என்பதையறிந்தால் இவர்களின் மனித நேயம் பொதுவெளியில் இருப்பவர்களுக்குப் புரியும்.

புராணக் கதைகளிலும் மத நூல்களிலும் ஆணுக்கும் ஆணுக்கும் திருமணம் நடந்ததாகவும், அதிலே குழந்தை பிறந்ததாகவும், திருமணமே ஆகாமல் அறிவியலுக்கு முரண்பட்ட விதத்தில் குழந்தை உண்டானதாகவும், குழந்தை பிறந்ததாகவும் இருக்கின்ற கதைகளை வைத்திருப்பவர்கள் தான் 1955 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து திருமணச் சட்டம் சட்டப்பிரிவு 12 அங்கீகரித்துள்ள திருமணமாகாமல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் உரிமையைக் கொடுத்திருக்கும் சட்டங்களை விமர்சனம் செய்கிறார்கள்.

அதிலேயும் கூட பெரும்பாலானவர்கள் *living together* என்று சொல்லப்படும் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் நிலையில் வாழ்வதில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழலாம் இங்கே ஒருவர் மீது மற்றொருவர் காதலே முக்கியம் என சட்டமே அங்கீகரித்தாலும் கூட அடிப்படைவாதிகளுக்கு காதல் என்றாலே கொஞ்சம் கசக்கத்தான் செய்கிறது.

காதலர் தினத்தில் பொது இடங்களில் சந்திக்கும் காதலர்களை அன்றைய தினமே திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தி வன்முறையில் ஈடுபடுபவர்கள் தங்களைக் கலாச்சாரக் காவலர்கள் என்கிறார்கள். காதலித்தவர்கள் உடனேயே திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என விரும்பும் கலாச்சாரக் காவலர்கள், ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தவரையும் ஆதிக்கச் சமூகத்தைச் சேர்ந்த மற்றொருவரையும் சேர்த்து திருமணம் செய்து வைத்து அவர்களின் பாதுகாப்பான வாழ்க்கைக்கு துணை நிற்பார்களா? எங்காவது நின்றதுண்டா?

ஆகவே இவர்களின் நோக்கம் சாதி மதக் கலப்பு மணம் கூடாது என்பதுதானே தவிர மற்றபடி கலாச்சாரப் பாதுகாப்பு என்பதெல்லாம் இல்லை. இன்றும்கூட இடைநிலை சமூகத்திற்குள் நடைபெறும் காதல் திருமணங்களைக் கலப்பு மணம் எனக்கூறி நாங்களும் சாதி மறுப்பு திருமணம் என்பதை ஏற்பவர்கள் தான் என்று பேசுகிறார்கள் இடைநிலையில் உள்ளே கலக்கும் போது எழும் எதிர்ப்புக்கும்,இணையர்களில் ஒருவர் இடைநிலை அல்லாத வேறு பிரிவினராக இருக்கும்போது எழுகின்ற எதிர்ப்புக்கும் அடிப்படையில் மிகப்பெரிய வேறுபாடுகள் இருக்கின்றது.

## காதலின் மேன்மை

தங்களுடைய வாழ்விணையரைத் தேர்ந்தெடுக்க சட்டப்படி வயதுவந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை உண்டு. அவ்விதமான உரிமையைப் பயன்படுத்தி இருவரும் இணைவது கலப்பதாகும் ஆனால் காதலற்ற மனங்கள் இரண்டும் கலப்பதில்லை, அது சுற்றியுள்ளவர்களால் சேர்த்து வைக்கப்பட்டு சேர்க்கப்படுவது. இரண்டும் கலக்கும்போது இருக்கின்ற காதல் சேர்க்கின்ற போது தோன்றுவதில்லை, காரணம், சேர்ப்பது செயற்கையானது.

கலப்பது இயற்கையானது. தமிழ் இலக்கியங்களில் தலைவன் தலைவியின் காதலை அக இலக்கியங்கள் வெளிப்படுத்துகிறது. காதல் திருமணம் செய்து கொள்பவரை உடன்போக்கு செல்லுதல் என தமிழிலக்கியம் குறிப்பிடுகிறது. காதலைப் போற்றுகின்ற இலக்கியத்தையும், காதல் திருமணம் பற்றிய செய்திகளையும் கொண்ட இலக்கியத்தையும் கொண்ட மொழிக்கு உரிமையுள்ளவர்கள் காதலை வெறுப்பது என்கிற செயல் ஒரு விதமான மனநோயாகும். திருமணத்திற்கு பின்பு காதல் வரவேண்டும் என்கின்ற புதிய பிற்போக்கு கருத்தாக்கம் பேசுகிறார்கள். திருமணத்துக்கு பிந்தையது காதல் என்றால் இல்லை என்பதே உண்மை. திருமணம் முடிந்த பின்னர் வருவது சுற்றத்தார் சேர்த்துவைத்த உறவின் மீது ஏற்படும் பற்றுதல் மட்டுமே!

வீட்டிலிருந்து புறப்பட்டுப் பல மணி நேரம் வெளியில் தங்கள் வாழ்விணையருடன் பயணமாகிக் கொண்டிருக்கும் வேளையில் நினைத்த இடத்தில் ,அது பொது இடமானாலும் சரி ஒரு ஓரமாக நின்று சிறுநீர் கழிக்கும் வசதிகொண்ட ஆண்கள் பெரும்பாலும் ஒரு பெண் அதிலும் தன்னுடைய வாழ்விணையர் சிறுநீர் கழித்து விட்டாரா? என்று கேட்பதும் இல்லை! சிந்திப்பதும் இல்லை! தன்னைப் பாதுகாப்பான இடத்திற்கு சிறுநீர் கழிக்க அழைத்துச் செல்ல வேண்டி ஒரு பெண் தன்னுடைய உபாதையை பொறுத்துக்கொள்ள முடியாமல் வெளிப்படுத்தினாலொழிய சிறுநீர் கழிக்க வசதி செய்து கொடுக்கும் அக்கறை கூட இல்லாத வாழ்விணையர்கள் தான் திருமணத்திற்கு பின் காதல் மலர வேண்டும் எனப் பேசுகிறார்கள்.

## காதலுக்குத் துணை செய்வோம்

சாதியையும் மதத்தையும் அழித்து மலரும் காதலால் ஆண் பெண் சமத்துவம் மேம்படுகிறது. அப்படிப்பட்டக் காதலர்கள் இணையர்களாக வாழ்வில் இணைவதன் மூலம் ஆணாதிக்கமற்றப் பெண்ணியம் மலர்ந்து அன்போடு நடைபோடும். மேன்மையான வாழ்க்கை ஏற்பட்டு,சமூகத்தில் சாதி மத வேற்றுமைகளால் மண்டிக்கிடக்கும் முன்னேற்றமற்றச் சமூகத்தை முன்னேற்றம் அடையச் செய்கிறது.

இப்படிப்பட்ட மானிட மேன்மைக்குரிய சமூகம் விரிவடைய காதலும் காதலைக் கொண்டாடும் காதலர் தினமும் இன்றியமையாதது. ஆகவே காதலுக்கும் காதலர் தினத்துக்கும் துணை நிற்போம். ●



▪ மார்ச் 23 – உலக வானிலை தினம்.

# சாதியற்றோர் சான்றிதழ்...

# புரட்சியா... பொறியா?

அரசியல் சமுதாயம் சாதியொழிப்பு முகாம்கள் இப்படி எங்கு திரும்பினாலும் சாதியாகவே இருக்கும் ஒரு சமுதாயத்தில் இந்தச் சாதியமைப்பை வெறுக்கும் ஒரு தனிநபர் நான் சாதியற்றவர் என்று கத்திக் கொண்டு ஓட வேண்டும் என்று நினைப்பது மிக மிக இயல்பானது. நிச்சயமாக அப்படி ஒரு வெறி நமக்கு வரத்தான் செய்யும். அப்படியொரு மனநிலையின் வெளிப் பாடுதானோ என்னவோ தோழர் சிநேகா தான் சாதியற்றோர் என்கின்ற சான்றிதழைப் பெற்றது.



ம.ஆ.சிநேகா

ஆனந்தகிருஷ்ணன் - மணிமொழி தம்பதியரின் மூத்த மகள் நான். காவல்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு சிறையில் உயிர் நீத்த போராளி சிநேகலதா நினைவாக சிநேகா எனப் பெயரிட்டனர். அம்மாவின் முதல் எழுத்தை முதலிலும், அடுத்தது அப்பாவின் முதல் எழுத்து என ம.ஆ.சிநேகா ஆனேன்....

இது சிநேகா அவர்கள் தன்னைப் பற்றி கூறியிருக்கும் வரிகள். ஓர் ஆழமான கருத்தியலுக்குச் சொந்தக்காரர் என்பதை இவ்வரிகள் நமக்கு பறைசாற்றுகின்றன. மேலும் ஒரு கொள்கைப் பாரம்பரியம் உள்ள குடும்பத்தின் வழித்தோன்றல் என்பதும் தெளிவாகிறது. இவரை இப்படியொரு சாதியற்றோர் சான்றிதழ பெறத் தூண்டியது எதுவென அவரது வார்த்தைகளிலேயே பார்ப்போம்.

முதல் வகுப்பு சேர்க்கையில் தான் பள்ளி நிர்வாகம் முதலில் நான் என்ன சாதி என்று கேட்டது. எனக்கு சாதி இல்லை என்று என் பெற்றோர் சொல்ல, மதத்தையாவது சொல்லுங்கள் என்றனர். மதமும் இல்லை என்றனர் என் பெற்றோர்.....

இப்படி தான் தொடங்கியது என் முதல் பிரச்சாரம்....

பள்ளி முதல் கல்லூரி வரை எதிலும் சாதி மதம் குறிப்பிட்டதில்லை. சாதி சான்றிதழும் இல்லை....என் தங்கைகள் மும்தாஜ் சூரியா, ஜெனிபர் அவ்வண்ணமே வளர்த்தனர்.... என் இணையர் கி.பார்த்திபராஜா உடனான என் இணை ஏற்பு விழா சாதி, மத சடங்குகள் அற்ற தாலி போன்ற சாதிய அடையாளங்கள் அற்ற புரட்சிகர விழாவாக நடத்தினோம்.... ஆதிரை நஸ்ரீன், ஆதிலா ஐரீன், ஆரிபா ஜெசி எனப் பெயரிட்டு எங்கள் மகள்களை சாதி மத அடையாளங்கள் இன்றி வளர்க்கிறோம்..... சாதி சான்றிதழை எல்லா இடங்களிலும் கேட்கும் இந்த அமைப்பிற்கு நாங்கள் அந்நியர்கள் ஆனோம்....

வாழ்வில் சாதி தன்னை வெளிப்படுத்தி உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒவ்வொரு இடத்திலும் அதனை மறுத்தும் அதற்கு எதிரிடையான வினைகள் புரிந்தும் தனது ஆழமான சாதி எதிர்ப்பு உணர்வை சமுதாயத்தில் பதிவு செய்பவராக அவர் இருந்திருக்கிறார். இருக்கிறார். இந்த இடம் வரை அவருடைய வாழ்க்கையும் என்னைப் போன்ற சுயமரியாதை இயக்க திராவிட இயக்கக் குடும்பங்களில் பிறந்து வளர்ந்த பலரது வாழ்க்கையும் ஒன்று பட்டு நிற்கின்றன. தனது அகவாழ்வில் இதனை விட தீவிரமான சாதி எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்த பலரையும் நாங்கள் சந்தித்தே இருக்கிறோம்.

தனது சாதித் தொழிலை செய்ய மறுத்தவர்கள். தனது சாதித் தொழிலை பிற சாதியினர் செய்வதற்கு ஏதுவான வேலைகள் செய்ய முற்பட்டவர்கள். சாதி மறுப்புத் திருமணத்திற்காக கொடுப்பதற்கரிய விலை பலவற்றை கொடுத்தவர்கள் என அந்தப் பட்டியல் நீண்டு போகும்.... அது மட்டுமல்ல அவ்வாறு செய்ய முடியாத நிலையில் உக்கி உருக்குலைந்தோரையும் நான் பார்த்திருக்கிறேன். என் தாத்தா முத்துச்சாமி அவர்களின் நண்பர் பெயர் மணி. சைக்கிள் கடை வைத்திருந்தார். ஏழ்மை அவருக்கு நிரந்தர நண்பனாக இருந்தது. பெண்ணுக்குச் சாதி மறுப்புச் சுயமரியாதைத் திருமணம் செய்ய ஆசை. வெறும் கொள்கையை வைத்துக் கொண்டு நின்ற அவரிடம் பெண் எடுக்கும் அளவுக்குக் கொள்கைவாதிகள் கிடைக்கவில்லை. தனது சொந்த சாதியில் கோவிலில் திருமணம். பத்திரிகை கொடுக்க வந்தவர் அழுதார். கோவில்ல வைக்கிறதையாவது நிறுத்தலாம்னு பார்த்தேன். முடியலை என்று சொன்னவரால் மேலே பேச முடியவில்லை. நான் அப்போது சிறுமி. அவரின் கண்ணீர் என் நினைவுகளில் பதிந்து போனது.

தெருக்களில் பள்ளிக் கூடத்தில் இப்படி கால் வைத்த இடத்திலெல்லாம் படைச்ச சாமியை இல்லைன்னு சொல்ற.... நீ எப்படி நல்லாயிருக்கப் போறேன்னு இந்த சமுதாயம் பலவாறாகக் கேட்ட கேள்விகளிலும் கேள்வி என்கின்ற பெயரில் ஏவப்பட்ட ஏச்சுக்களையும் கடந்து சீரணித்துதான் எங்களைப் போன்றோரின் வாழ்க்கை நின்று கொண்டிருக்கிறது. நான் படித்த பள்ளிக் கூடத்தில் அதன் பொது அசெம்பிளியில் கடவுள் எனக்கு நல்ல புத்தியைக் கொடுத்து என்னை ஆட்கொள்ள வேண்டுமென்று ஜெபித்தது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் அவர்களின் கடவுளுக்கு அவர்கள் பிரார்த்தனை இன்னும்

கேட்கவேயில்லை. பாவம் அந்த ஆசிரியர்கள் எனக்காக எத்தனை முறை ஜெபித்தார்கள்?

## இந்தச் சமுதாயத்தில் சாதியை, மதத்தை எப்படி மறுப்பது?

இந்தச் சமுதாயத்தில் சாதியை மதத்தை எப்படி மறுப்பது? வாழும் முறையிலேயே சாதியை மறுக்கும் புது வாழ்க்கை நெறி தந்தவர் பெரியார். பொட்டு வைக்கவில்லை ... கிறித்துவரா என்பார்கள் இல்லை என்போம். இஸ்லாமியரா என்பார்கள் இல்லை என்போம். இப்போதுதான் பள்ளிக் கூடத்தில் மட்டும் கேட்கிறார்கள். அப்போதெல்லாம் பேருந்துக்குக் காத்திருக்கையில் கூட கேட்பார்கள். பேருந்தில் அமர்ந்திருக்கும் போதும் கேட்பார்கள். யார் வேண்டுமானாலும் கேட்பார்கள். நீ யார் கேட்பதற்கு என்று யாரையும் நாங்கள் திருப்பிக் கேட்டதில்லை. அந்தக் கேள்விக்குக் காத்திருப்பவர்கள் போல் பதிலளிப்போம். மதம் இல்லை என்று சொல்வோம். ஆம் மதமறுப்புப் பிரச்சாரத்தை நெற்றியிலேயே வைத்திருக்கிறோம் நாங்கள்.

பொட்டு, பூ, நகை துறக்கச் சொன்னார் பெரியார். துறந்த இடங்களிலெல்லாம் கேள்விகள் வந்தன. மதமறுப்பு சான்றிதழாய் வாழ்ந்தோம் வாழ்கிறோம் நாங்கள். தாலி கட்டவில்லையே அப்ப உன்னைக் கல்யாணமானவன்னு நாங்க எடுத்துக்க வேண்டிய அவசியமில்லையேன்னு கேட்டவனையெல்லாம் எதிர்கொண்டுதான் நீ கட்டாத தாலியை நான் ஏண்டா கட்டணும்னு கேட்டோம். எங்களைக் காப்பாத்த தாலி வேண்டாண்டா செருப்பு போதும்னு சொன்னோம். பொறுக்கி மட்டுமல்ல போலீசும் அதே கேள்வியைத்தான் கேட்டது. இப்போது பிரபலமாக இருக்கும் எங்கள் தோழர்களில் ஒரு தம்பதியர் ஒருமுறை இரண்டாவது ஆட்டம் திரைப்படத்துக்கு போய்விட்டு வந்து போலீஸ் ஸ்டேசன்ல போய் உட்காரும்படி ஆகி விட்டது. தாலி இல்லைன்னா கணவன் மனைவின்னு எப்படி நம்புறதுன்னு கேட்டார் அந்தக் காவல்துறை அதிகாரி...... ஒருமுறை இன்னொரு தோழர் ஒருவர் அலுத்துப் போய் சரி அண்ணன் தங்கச்சின்னு சொல்றேன். அதையாவது நம்பு. அதுக்கு தாலி வேணாம்ல. ஆளை விடு என்றார்.



இந்தக் கதையெல்லாம் எதுக்குன்னு கேட்கிறீங்களா...? சாதியும் மதமும் அதற்கு எதிர்மறையாய் மாத்தி வாழ்ந்து காட்டி தீர்க்க வேண்டிய சமுதாய நோய்கள். நான் மேலே குறிப்பிட்ட சூழல்கள் மாறியிருக்கலாம். ஆனால் முடிந்து போய் விடவில்லை. சரி. இப்போது மறுபடியும் சிநேகாவிடம் வருவோம். அவரின் புரிதல் என்னவாக இருக்கிறது என்று பார்ப்போம்.

சாதிய அமைப்பிற்கு அடையாளமாக இருக்கும் சாதி சான்றிதழ் போல், சாதி மதம் அற்றவர் என்ற எங்கள் வாழ்விற்கு ஒரு அடையாளமாக ஒரு சான்று வேண்டும் என முடிவு செய்து அதற்காக முயற்சித்தேன்.


சாதிய அமைப்பிற்கு அடையாளமாக இருக்கும் சாதி சான்றிதழ்... என்று தொடங்கியிருக்கிறார். அப்படியென்றால்...? இந்த இடத்தில் சாதிச் சான்றிதழ் பற்றி நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. சாதி சான்றிதழ் சாதி ஒழிப்பு இயக்கத்தவரால் தோற்றுவிக்கப் பட்டது. அது சாதியொழிப்புப் பணிக்கு ஆதாரமானதே யொழிய சாதி அமைப்பின் ஆதாரமுமல்ல அடையாளமுமல்ல. சாதி அமைப்பின் அடையாளம் என்கின்ற முத்திரையை அதற்குத் தருவது பேராபத்து.

சரி. இந்தச் சான்றிதழால் இவர் என்ன சமூகச் செயற்பாட்டை ஏற்படுத்த நினைக்கிறார் என்பதும் நமக்குப் புரியவில்லை. அடுத்து இந்தச் சான்றிதழ் என்ன அடிப்படையில் வழங்கப் பட்டது சாதியற்றோர் என்கின்ற வார்த்தைக்கான வரையறை என்ன என்பதும் வெளிப் படுத்தப் படவில்லை. சாதியை மறுப்போர் அல்லது பள்ளியில் சாதி சொல்ல விரும்பாதவர்கள் சாதியற்றவர்கள் என்று வகுக்கப் பட்டால்.. முடிந்தது கதை. பிறகு அம்பேக்கர் சிலைக்கு அடியில் உட்கார்ந்து நாம் அழத்தான் வேண்டும்.

சட்டப்படி பள்ளியில் சாதி சொல்ல விரும்பாதவர்கள் சான்றிதழில் சாதியற்றோர்தான். அவர்கள் தாராளமாக சாதியில்லாமல் பள்ளியில் சேர முடியும். தனியார் பள்ளிகள் இதனைக் கடைப் பிடிக்க மறுக்கிறார்கள். நாம் என்ன செய்ய வேண்டும். யார் சட்டப்படி நடக்கவில்லையோ அவர்களைத் திருத்த வேண்டும். அதை விட்டு விட்டு சாதியற்றோர் என்கின்ற சான்றிதழ் எதற்கு?



இதில் மதமற்றோர் என்பதையும் சாதியற்றோர் என்பதும் இருவேறு விசயங்கள். இதெல்லாம் இருக்கட்டும் சாதியில்லை என்பது முற்போக்குதானே? எதுக்கு இவ்வளவு பஞ்சாயத்து? நல்லது நடக்க விடமாட்டீங்களா என்கின்ற ரேஞ்சுக்கு பேசத் தொடங்கிடாதீங்க. கமலகாசன் பாராட்டு ....சார்பதிவாளர் பிரியங்கா பங்கஜம் வழங்கிய சான்றிதழ்..... சாதி ஒதுக்கீடு இல்லாதவர்களுக்கு 10 சதவீத இடஒதுக்கீடு ஒரு புரட்சியின் தொடக்கம் என்றுரைத்திருக்கும் மோடி.... கொஞ்சம் நிதானமாக விவாதிக்கலாமே? ●




# கறுப்பர் மக்களின் வரலாற்று மாதம்

அமெரிக்க நாட்டில் பிப்ரவரி மாதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. மறைக்கப்பட்ட வரலாறுகளை, ஒடுக்கப்பட்ட இனத்தின் மக்களே உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டிடும் உன்னத மாதம். ஒரு நீண்ட போராட்டம் கடந்து வந்த பாதையினை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் மாதம். ஆம் பிப்ரவரி மாதம் முழுவதும் அமெரிக்காவில் கறுப்பின மக்களின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக "The Black History Month " கடைப்பிடிக்கப்படுகின்றது.

இதனைத் தொடங்கியவர் Dr. Carter G.Woodson. Dr. Carter அவர்களின் பெற்றோர்கள் அடிமைகளாகப் பணி செய்தவர்கள். இந்தச் சூழ்நிலையில் வளர்ந்த Dr. Carter அவர்கள் தன் உழைப்பால், ஊக்கத்தால் வரலாற்றுப் பாடத்தில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் 1912ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார். அப்போது தான் வரலாற்றுப் பாடங்களில் அமெரிக்காவின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்த கறுப்பினத்தவரின் வரலாறு முற்றிலுமாக புறக்கணிக்கப்படுவதைக் கண்டு வருத்தமுற்று 1915இல் கறுப்பின மக்களின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள ஒரு அமைப்பினை ஏற்படுத்தினார். தொடக்கத்தில் Association for the Study Of Negroes Life and History என்ற அமைப்பே பின்னாளில் Association for the Study Of Afro -American Life and History என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1926 ஆம் ஆண்டு தான் Dr. Carter G.Woodson, நீக்ரோ வரலாற்று வாரம் என்ற முன்னெடுப்பு மூலம் நாடு தழுவிய அளவில் கறுப்பின மக்களின் வரலாற்றுப் பங்கைத் தெரிந்து கொள்ள ஆவண செய்தார்.

வூட்ஸன் அவர்களின் மரணத்திற்கு பின், 1940களில் மெல்ல மெல்ல கறுப்பின மக்களின் வரலாற்றைச் சொல்லும் மாதம் விரிவாக்கப்பட்டது. அமெரிக்காவின் தென் பகுதிகளில் கறுப்பின மக்களின் வரலாற்று முக்கியத்துவம், பங்களிப்பு பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டது. கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது பரந்த சிந்தனைக் கொண்ட வெள்ளையர்களும் வரலாற்றைத் தெரிந்து கொண்டனர். இதனால் இரு பிரிவினிரிடம் இருந்து வந்த மோதல் போக்குகள் சற்றே மறையத் தொடங்கின. பின் 1976ஆம் ஆண்டு தான் ஒரு வாரமாகக் கொண்டாடப்பட்டு வந்த இந்த நிகழ்வு ஒரு மாதமாக மாற்றப்பட்டது.

ஏன் பிப்ரவரி மாதம் திரு. வூட்ஸ்ன் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக கறுப்பின மக்களின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்ட இருபெரும் தலைவர்கள் Frederick Douglass மற்றும் Abraham Lincoln அவர்கள் இருவரும் பிறந்த மாதம். அதுமட்டுமல்லாமல் பிப்ரவரி மாதம் வரலாற்று ரீதியாகவே பல சிறப்புகளைக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் சமூக உரிமைச் செயற்பாட்டாளர், மற்றும் The National Association for the Advancement of Colored People (civil rights organization in the United States) என்ற அமைப்பின் துணைத் தலைவராகச் செயலாற்றிய W. E. B. Du Bois அவர்களின் பிறந்த நாள் பிப்ரவரி 23, 1868.

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தில், 15 வது சட்டத்திருத்தம் மூலம் கறுப்பின குடிமக்களுக்கு அமெரிக்க மண்ணில் ஓட்டுப்போடும் உரிமை வழங்கப்பட்டது பிப்ரவரி 3, 1870 ஆம் ஆண்டு.

முதல் ஆப்பிரிக்க அமெரிக்க செனட்டராக (senator )Hi-

## வழக்கறிஞர் ம.வீ. கனிமொழி



*ram Rhodes Revels* பதவி ஏற்றுக்கொண்டது பிப்ரவரி 25,1870.

*The National Association for the Advancement of Colored People(NAACP)* உருவானது பிப்ரவரி 12, 1909.

இப்படித் தொடர்ச்சியாக கறுப்பின மக்களின் பங்களிப்பில், பிப்ரவரி மாதம் முக்கியமாக இருந்து வந்த காரணத்தினால் வூட்ஸ்ன் அவர்கள் இம்மாதத்தைத் தேர்ந்தெடுத்தார். கறுப்பின மக்கள் கடந்து வந்த பாதையை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் ஒரு மாதமாக பிப்ரவரி மாதம் இருக்கின்றது எனின் அது மிகையல்ல .

அமெரிக்காவில் மட்டுமல்லாது கனடா , நெதர்லாண்ட்ஸ், அயர்லாந்து போன்ற நாடுகளிலும் இந்த முன்னெடுப்பு கடைப்பிடிக்கப்படுகின்றது.

கறுப்பின விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் எனப் பலரின் பங்களிப்பு அமெரிக்காவில் வளரும் பல இனத்தவருக்கும் தெரிவிக்கும் ஒரு முயற்சியே இந்த மாதம். மேலும், கறுப்பின மக்களின் பண்பாடு, அவர்களின் விடுதலை உணர்வு, அதனை அடைய அவர்கள் மேற்கொண்ட போராட்டங்கள் என இம்மாதம் முழுவதும் தகவல் சுரங்கமாகவே முன்னெடுக்கப்படுவது மிகச் சிறப்பான செயல்பாடு.

*Maya Angelou* (கவிஞர்), *Langston Hughes* (கவிஞர், *jazz*) *Alexa Candy* (முதல் கறுப்பின மரபியல் மருத்துவ நிபுணர்) எனப் பலரைப் பற்றியும் இந்த மாதத்தில் குறுந்தகவல்களை பள்ளிகள், கல்லூரிகள், பொது இடங்களில் அறியமுடியும், மேலும் இன்றைய காலகட்டங்களில் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் பரப்புகின்றனர்.

இந்தச் சிறப்பு வாய்ந்த முன்னெடுப்பை நாம், நம் தமிழ் நாட்டில் திராவிடர் இன எழுச்சி மாதமாக ஏதேனும் ஒரு மாதத்தைத் தேர்ந்தெடுத்து கொண்டாடுதல் வருங்காலத்தில் நிறைய பலன்களைத் தரும். 100 ஆண்டு கால வெற்றி இயக்கமாக திராவிடர் இயக்கம் என்ன சாதித்தது? திராவிடர் தலைவர்கள் செய்தது என்ன? திராவிட ஆட்சிகள் வழங்கிய சமூக நீதி திட்டங்கள் என விரிவுபடுத்தி அடுத்த தலைமுறையினருக்கு தகவல்களை வழங்கிடும்போது சில ஒட்டுண்ணிகளும் இன எதிரிகளும் செய்யும் சதி வலைகளை அறுத்தெறிய முடியும்.

எடுத்துக்காட்டிற்கு 1939 தான் முதல் கோயில் நுழைவு போராட்டம் வைத்தியநாத அய்யர் நடத்தினார் என்ற பொய்யை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டு தெரியும் சில அரைவேக்காடுகளின் முகத்திரையைக் கிழித்து, சுயமரியாதைத் தோழர்கள் 1927களில் நடத்திய கோயில் உள் நுழையும் போராட்ட வரலாறுகளைக் கண்காட்சிகள் மூலம் பொது இடங்களில் குறுந்தகவல்கள் மூலம் பரப்பலாம். இப்படி ஒரு மாதம் முழுக்க நாம் கடந்து வந்த பாதையின் வலிகளை, வெற்றிகளைப் பரப்புவதன் மூலம் உண்மையில் திராவிடம் இந்த உழைக்கும் மக்களை வீழ்த்தியதா? வாழ வைத்ததா? என்பதை இளைஞர்களுக்குப் புரிய வைக்க முடியும். அடுத்து வரும் திராவிட ஆட்சியில் நாம் இதனைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும் என்பதே பெரியாரியத் தொண்டர்களின் அவா. ●

## பேரா. பழ.வெங்கடாசலம்
மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



### லிங்கம் வரவழைத்தல்

ஒரு சிறிய 1/2 " உயரம் உள்ள லிங்கத்தை கர்ச்சீப் துணியில் வைத்து யாருக்கும் தெரியாதவாறு முகம் துடைப்பதுபோல் வாயில் போட்டுக் கொள்ள வேண்டும். பிறகு லிங்கம் அடிவயிற்றிலிருந்து வருவது போல் செய்து காண்பிக்கவும்.

### பாட்டிலின் உள்ளே இருக்கும் துணியை வெளியில் எடுத்து விட்டு மீண்டும் அதேபோல் துணியை வரவழைத்தல்

### தேவையானப் பொருட்கள்

மூடியுடன் பாட்டில், பாட்டில் உள்ளே போகும் அளவுக்கு அட்டை உரை,மெல்லிய துணி

### மேஜிக் செய்யும் முறை


மூடியுடன் உள்ள பாட்டிலின் உள்ளே ஒரு கலர் துணி இருப்பதைப் பார்வையாளருக்குக் காண்பிக்க வேண்டும். மூடியைத் திறந்து உள்ளே இருக்கும் துணியை வெளியில் எடுத்து விடவும். அந்தத் துணியைப் பத்திரமாக தீயில் எரித்து விடவும். பிறகு பாட்டிலைக் காண்பித்து எதுவும் இல்லை என்பதை உறுதிப் படுத்தவும். பாட்டில் மூடியை எடுத்து மூடிவிடவும். தற்போது தயாராக உள்ள உரையை பாட்டில் மேலே செறுகவும். மந்திரம் போடுவது போல முனுமுனுக்கவும். பாட்டில் மீது இருந்த உரையை எடுத்து விடவும். இப்போது மீண்டும் முன்பு எரித்த துணி அப்படியே பாட்டில் உள்ளே இருக்கும். கண் முன்னே எரிக்கப்பட்ட துணி மீண்டும் அப்படியே இருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கி விடுவர்.

### மேஜிக் இரகசியம்

பாட்டிலுக்கு ஏற்ற 9" உயர உரை செய்யும் போது ஒருபுறம் 1"உயர தக்கையை வைத்து விட வேண்டும். தங்கையின் மத்தியில் உரையின் உயரத்திலிருந்து 1" குறைவாக உள்ள சிறிய கம்பியை பொருத்தி விடவும். ஒரே அளவு உள்ள எந்த வேறுபாடும் இல்லாத இரண்டு மெல்லிய துணி வைத்துக்கொள்ள வேண்டும். ஒன்று பாட்டில் உள்ளே இருக்கும் மற்றொண்றை உரையின் முன்பகுதியில் கம்பி முனையில் வெளியில் தெரியாதவாறு வைத்து விடவும். பாட்டில் மூடியின் மேல்புறம் வட்டமாக வெட்டி எடுத்து விடவேண்டும். முதலில் பாட்டிலில் இருந்த துணியை எடுத்து விட்டு பிறகு உரையை பட்டில் மீது செருகும்போது துணி பாட்டிலுக்கு உள்ளே சென்று விடும்.

**குறிப்பு:** இதைத் தனியே பலமுறை செய்து பயிற்சி பெறவும். ●

# அரசியல் சட்டமா? சனாதன தர்மமா?



சனாதனம் நல்லது என்ற கருத்து இந்தியாவில் வளர்ந்து கொண்டு வருகிறது. இன்றைய கால கட்டத்தில் தோழர் திருமாவளவன் மூலமாகத் தான் அந்தச் சொல்லின் ஆபத்து என்ன என்ற விளக்கம் மக்களுக்குத் தெரிகிறது, அவரைப் பாராட்டுகிறேன். இதை என்னவாக சொல்வது என்று நிறைய பேருக்கு குழப்பம் உள்ளது. இந்துத்துவப் பயங்கரவாதம் என்று சொல்லலாம்? சாதாரணமாக திருநீர் பூசிக்கொண்டு யாருடனும் சண்டைக்கு போகாத ஒரு சகோதரருக்கு நம்மை பயங்கரவாதி என்று சொல்கிறார்களோ என்று தோன்றுகிறது. நான்பாட்டிற்கு கோவிலுக்கு போகிறேன், திருநீர்பூசுகிறேன், படையல்போடுகிறேன், கடாவெட்டுகிறேன், என்னைப் போய் ஏன் பயங்கரவாதி என்று சொல்கிறீர்கள், என்று அவர் கேட்டால் உன்னைச் சொல்லவில்லை என்று சொல்ல வேண்டி இருக்கிறது. காவி பயங்கரவாதம் என்றாலும் காவி என்பது எல்லாமே பயங்கரவாதம் கிடையாது. வள்ளலாரும் காவியும் வெள்ளுடையும் தான் அணிந்தார். "செங்கல்பொடிக் கூரை வெண் பல் தவத்தவர்" என்று ஆண்டாள் பாடினார், (கூரை என்றால் ஆடையைக் குறிக்கும்) காவி என்பது செங்கல் பொடி போன்ற நிறம்; ஆரஞ்சு நிறம் போன்று இருக்காது, நம்ம ஊரு காவி செங்கல்பொடி போன்று அமைதியாதான் இருக்கும். வடநாட்டுக் காவி தான் ஆரஞ்சு பான்டாகலரில் இருக்கும்.

அதே போன்று நமது உறவினர்கள், நண்பர்கள், எல்லாரும் பக்தியானவர்கள், அவர்கள் பயங்கரவாதிகள் கிடையாது. அடுத்தவர்களுக்குத் தொல்லை கொடுப்பவர்கள் கிடையாது, அடுத்தவருடைய கோவிலை இடிக்கவேண்டும் என்று சொல்பவர்கள் கிடையாது. அப்படியே என்றோ அப்படிப்பட்ட ஒரு தப்பு நடந்திருப்பதைப் பேசினால், போப்பா, சும்மா பழையதை பேசிக்கொண்டிருக்கிறாய். இன்றைக்கு எல்லோரும் தாயாய்ப் பிள்ளையாய்ப் பழகிக் கொண்டிருக்கிறோம், சேர்ந்து வாழும் வழியைப் பாருங்கள் என்று சொல்பவர்கள்

தான் நம்முடைய மக்கள்.

ஆனால், இவர்களிடம் அந்த பயங்கரவாதம் எந்தப் பெயரில் பரப்பப்படுகிறது? நம்மோடு வாழ்கிற மக்கள் மீதான வெறுப்பு எந்தத் தத்துவத்தால் பரப்பப்படுகிறது? என்று பார்த்தால், அதனுடைய உண்மையான பெயர் சனாதனம்.

சனாதனத்தை, தர்மம் என்று ஏன் சொல்கிறீர்கள்? என்று கேட்பர்கள், அதற்குப் பெயர் சனாதன தர்மம் தான், இந்த தர்மம் ஒருவருக்கு சரியானதாக இருக்கும் இன்னொருவருக்கு சரியானதாக இருக்காது. அதுதான் சனாதன தர்மம், தர்மசங்கடம் என்பதற்கு என்ன அர்த்தம், செய்யலாமா? கூடாதா? என்ற குழப்பம் என்று அர்த்தம். தமிழில் தர்மம் என்கிற சொல் இல்லை, தமிழில் தர்மம் என்றால் பிச்சை போடுவது என்பது பொருள். சரியானது என்ற பொருள் இல்லை.

*"ஈன்றாள் பசி காண்பானாயினும்; செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை"* என்றது திருக்குறள்

பெற்ற தாய் பசியாக இருந்தால் அன்றைய நல்ல மகன்கள் கவலைப்பட்டிருக்கிறார்கள், அம்மாவிற்கு உதவி செய்திருக்கிறார்கள், அம்மா பட்டினி கிடந்து, கூலிவேலை செய்து, சம்பாதித்து வருவதை, ஏம்மா இதுதான் சோறா? என்று சொல்லி தட்டை எடுத்து வீசாமல், அம்மா பசியுடன் இருந்தால், அவரது பசியாறுவதற்காகப் போய் திருடிக் கொண்டு வந்து கொடுத்திருப்பார்கள். அம்மா என்ற சொல் மனதைத் தொடுகிற ஒரு சொல். அந்த அம்மாவிற்காகக் கூட சான்றோர் பழிக்கிற வேலையை நீ செய்யக்கூடாது என்று உரைப்பதற்குப் பெயர் தர்மம் இல்லை, அதன் பெயர் அறம்.

இந்த "அறம் எதற்கும் வளைந்து கொடுக்காது, தமிழில் நியாயத்திற்கான சொல் அறம். சமஸ்கிருதத்தில் தர்மம். அந்த தர்மம் கிருஷ்ணன் மூலமாக வந்து விளையாடும் தந்திரக்காரர்களை அறிவாளி என்று நம்பவைக்கும் உண்மையில் அறிவாளி வேறு தந்திரக்காரர் வேறு. திருடன் என்றால் அவர் அறிவாளி தான். ஆனால் அறிவாளி எல்லாம் திருடன் கிடையாது. நாம் பொதுவாக நினைப்பது என்னவென்றால் நல்லவர் என்றால் அவரை ஏமாற்றலாம் என்று நினைக்கின்றோம். அவர் ஏமாறாமல் எச்சரிக்கையாக இருந்தால் 'என்னது? இவரைப் போய் நல்லவன் என்று நினைத்தேன்" என்பார்கள். அப்பொழுது தான் புரிகிறது ஒருவரை நல்லவர் என்று நினைக்காமல் முட்டாளாக நினைத்திருக்கிறாய். நல்லவரை முட்டாளாகவும் கெட்டவரை அறிவாளியாகவும் நினைத்துக் கொள்கிறோம். இதற்குக் காரணம் என்னவென்றால் உயர்ந்த தலைவர்களாக, வழிகாட்டியாக காட்டப்பட்ட புராணபுருஷர்கள் எல்லாம் இப்படிப்பட்ட தந்திரசாலிகள், கெட்டவர்கள் அவர்கள் பின்பற்றியது தர்மம். அந்த தர்மத்தின் பெயர் வருணாசிரமதருமம், இந்த வர்ணாசிரமதர்மம் என்பது அழியாதது, அதற்கு பெயர் தான் சனாதனதர்மம். வருணாசிரமம் என்பது அவர்களது தர்மம், நமக்கு அதில் எந்த பிரச்சனையும் இல்லை சனாதனமும் அவர்களின் தர்மம், அதுவும் நமக்கில்லை. இது இரண்டையும் கொண்டு வந்து நம் தலையில் கட்டும்பொழுது தான்



அது பயங்கரவாதம். ஒரு இசுலாமியர் இசுலாமியராக வாழ்வதில் நமக்கு என்ன பிரச்சனை. ஆனால், நீங்களும் இசுலாமியர் தான் அதனால் எங்களைப் போல் மாறுங்கள் என்று சொன்னால் அது பிரச்சனை. உங்கள் உடை வேறு எங்கள் உடை வேறு என்று சொன்னால் அது தப்பில்லை. ஆனால் நீங்களும் இப்படித்தான் உடுத்தவேண்டும் என்பது, நாங்கள் பன்றி சாப்பிடமாட்டோம், எனவே நீங்கள் பன்றியை வெட்டவே கூடாது என்று சொன்னால் அதற்குப் பெயர் பயங்கரவாதம். மக்கள் அதிகமாக வாழும் நாட்டில் அவர்கள் தங்களுக்குச் சட்டமாகக் போட்டுக்கொள்ளலாம். ஆனால், எந்த மக்கள் அதிகமாக வாழும் நாடாக இருந்தாலும், மற்றவர்களுடைய உணவில் கை வைத்தால் அதற்கு பெயர் பயங்கரவாதம். அதனால் தான் அரபுநாடுகளில் கூட இங்கு பன்றிக்கறி விற்கப்படும் என்று போடப்பட்டுள்ளது, அங்கு யார் சாப்பிட்டால் குற்றம் என்றால் இசுலாமியர் சாப்பிட்டால் குற்றம், வெளிநாட்டவர், வெள்ளைக்காரர், இந்தியர் சாப்பிட்டால் குற்றம் கிடையாது.

அதே போல ஒருவர் மாட்டுக்கறி சாப்பிடுவார் என்று சொன்னால் அவர் சாப்பிடுவதை நீங்கள் குற்றம் என்று சொல்லக்கூடாது. சில இடங்களில் சாப்பிடாதவரைப் பார்த்து பரவாயில்லை சாப்பிடுங்கள் என்று சொல்லி விரும்பாத உணவை அவர் தட்டில் போட்டால்தான் குற்றம், அது வன்முறை. அதே போல மாட்டுக்கறி சாப்பிடும் எங்கள் தம்பியைச் சாப்பிடாதே, எனது ஜீவகாருண்யம் பாதிக்கிறது என்று சொன்னால் அது குற்றம். விரும்பாதவரை சாப்பிடச் சொல்வதும் குற்றம். உண்பவரைத் தடுப்பதும் குற்றம். இரண்டும் குற்றம் தானே, ஆனால் இந்த நாட்டில் எந்த குற்றம் நடக்கிறது, சட்டப் பாதுகாப்பு கிடைக்கிறது, என்று சிந்தியுங்கள்.

எனவே, அரசியல் சட்டம் எல்லாருக்கும் சமவாய்ப்பைக் கொடுத்தாலும் இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாக அதை பறித்துக் கொண்டிருப்பது எது, அது தான் சனாதனதர்மம். அரசியல் சாசனத்தை செயலிழக்கச் செய்கிற சனாதனதர்மத்தை உயர்த்திப் பிடிக்கின்ற தார்மீகர்களின் கையில் ஆட்சி இருக்கிறது.

வரலாற்றை எடுத்துப் பார்த்தீர்களானால் ரிக்வேதத்தில் புருஷ சூக்தம் எனும் பகுதியில் பிரம்மன் எனும் பிரகஸ்பதியின் முகத்திலிருந்து பிராமணன் தோன்றினான், தோளில் இருந்து சத்திரியன் தோன்றினான், தொடையில் இருந்துவைசியன் தோன்றினான், காலில் இருந்து சூத்திரன் தோன்றினான், என்று வர்ணங்களின் தோற்றம் பற்றி கூறப்பட்டுள்ளது. அது வேதத்தின் கடைசிகாலம், அங்கு ஆரம்பித்தது மனுஸ்மிருதியில் சட்ட வடிவமாகிறது. மனுதர்மத்தை தான் நமது மன்னர்கள் காப்பாற்றினார்கள். மன்னர் கேட்கிறார் மந்திரி நம் நாட்டில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? மனுநீதி தவறாமல் ஆட்சி நடக்கிறதா? ஆட்சி எப்படி நடக்க வேண்டும்? என்று.

மனுநீதி என்ன சொல்கிறது, யார் யாருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம், யார் படிக்கலாம், யார் படிக்கக்கூடாது, ஒவ்வொரு குடும்பமும் எப்படி நடக்கனும்,


▪மார்ச் 1 1917 இந்திய - தபால் நிலையங்களில் சேமிப்பில் பத்திரமுறை தொடங்கப்பட்டது.

பெண்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும், என்பதைச் சட்டமாகச் சொல்கிறது. பெற்ற பெண்குழந்தையை வயதுக்கு வருவதற்கு முன்னால் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும். கல்யாணம் செய்து கொண்ட பெண் எப்படி நடந்து கொள்ளவேண்டும். ஒரு கணவர் மனைவியை அடித்தால் எப்படி நடந்து கொள்ளவேண்டும், சத்தம் போடக்கூடாது, கத்தி அழக்கூடாது, கணவர் முன்னால் மண்டியிட்டுச் சத்தமின்றி கண்ணீர் மல்கக் கைகளைக் கூப்பி என் கடவுளே உங்களைக் கோபப் படுத்திவிட்டேனே, இனிமேல், இப்படிக் கோபப்படுத்தமாட்டேன் என்று மன்னிப்பு கேட்கவேண்டும், என்றல்லாம் கட்டளையிடுகிறது "மனு தர்மம்" (கூட்டத்தினர் சிரிப்பு)

இதற்கு பெயர் தான் சனாதனம். இந்த ஆதிக்கத்தை தனக்கு (இது போன்ற கூட்டங்களுக்கு இங்கு வந்திருக்கக்கூடியவர்கள் உங்கள் வீட்டுப் பெண் ஒருவரை அழைத்து வரவேண்டும்), இன்னொருவர் அடிமையாக இருப்பதை ஒருவரைக் கொடுமைப் படுத்துகிற கொடூரத்தை ரசிக்க வைக்கின்ற மனநிலைக்குப் பெயர் தான் சனாதனம். சனாதனதர்மம், "அடிப்பதைப் பற்றி சொன்னபோது உங்களுக்கு சிரிப்பு வந்தது" யார் மேலேயே கோபம், வந்தால் அதன் விளைவாக அள்ளி விடுகிறீர்கள். செந்தமிழ் சொற்பிறப்பு, அகரமுதலியில் இல்லாத சொற்கள் எல்லாம் வரும், அகராதியில் இல்லாத வார்த்தை எல்லாம் வரும், எல்லாம் யாரைப்பற்றி வரும் பெண்களைப் பற்றி வரும். அது உங்களுக்கு நன்றாக இருக்கும், அடி வாங்கும் உங்கள் சகோதரிக்கு நன்றாக இருக்குமா? அடி வாங்கிக் கொண்டிருந்த உங்கள் அம்மாவிற்கு நன்றாக இருக்குமா? இந்த தர்மம் காப்பாற்றப்படட்டும் என்று அவர்கள் சொல்வார்களா? எடுடா விறகு கட்டையை என்று சொல்லமாட்டார்களா? இன்னும் மரியாதையாகக் கூட சொல்வார்கள். இது தான் தர்மம், இதை நம்புங்கள் என்று சொன்னால் அடிவாங்குகிற பெண்ணிற்கு கோபம் எப்படி வருமோ அது போல சாதியில் உங்களைச் சொல்லும் பொழுது வருகிறதா? (கைத் தட்டல்)

பார்ப்பனரல்லாதவர் எல்லோரையும் சூத்திரன் என்று சொல்லும் பொழுது கோபம் வருகிறதா? இந்த இடத்தில் நமக்கு சமூகமாகக் கோபம் வருகிறதல்லவா? அதே கோபம் ஒவ்வொரு படிநிலையில் தனக்கு கீழே ஒருவர் அதற்கு கீழே ஒருவர், அவர்களுக்கும் கீழாக அவரவர் வீட்டுப் பெண்கள் என்று சொல்லிச் சொல்லி மனிதனை மனத்தளவில் கொடூர நோயாளியாக்கிய தர்மத்திற்குப் பெயர் தான் சனாதனதர்மம், அது யாரையும் விட்டு வைக்காது. நம்மைப் பொறுத்தவரை பார்ப்பான் என்றால் சாமி. சாமிக்கே அவர்தான் சாமி. வக்கீல்சார், குமாஸ்தா சாமி. ஓட்டல் மேனேஜரை யோவ் என அழைப்பதும் சர்வரை சாமி என அழைப்பதும் நடந்து வருகிறது.

நமக்கு தான் அப்படியே தவிர அவர்களுக்குள்ளும் பேதம் இருக்கிறது. அதில் புரோகிதர் இருக்கிறார் - அவர் கோவிலில் இருப்பார், வாத்தியார்கள் இருக்கிறார்கள்- அவர்கள் சடங்குகள் செய்கிறார்கள். இதைத் தாண்டி சவுண்டி என்கிற சமூகம் இருக்கிறது- அவர்கள் பிணம் தூக்குபவர்கள், கேள்விப்பட்டதுண்டா? அந்த சவுண்டிகள் எங்கிருந்து வருகிறார்கள்? வேறு சாதிக்காரர்களா? கலப்புத் திருமணம் செய்தவர்களா? பார்ப்பனர்களிலேயே ஏழ்மையினால் அங்கு போனவர்கள் ஒரு கிலோ நெய், வாங்கச் சிரமப்படும் *65,000* ரூபாய் சம்பளம் வாங்கும் ஏழைகள் அல்ல. *10* சதவிகித ஏழைகள் இல்லை. மிகக்கொடூரமான முறையில் ஒதுக்கப்பட்டு சுடுகாட்டிற்கு அருகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். பார்ப்பனர் வீடுகளில் பிணம் சுமப்பவர்கள் அவர்கள் சாப்பிடும் சாப்பாடு சவுண்டி சாப்பாடு, அவர்களும் வேறு நபர்கள் வீட்டில் சாப்பிட மாட்டார்கள். பார்ப்பனர் வீட்டில் தான் சாப்பிடுவார்கள், அங்கு நிற்பவர்களில் பல பேர் சொந்தக்காரர்களாக இருப்பார்கள். அந்தப் பையனுடன் வளர்ந்தவர்களாக இருப்பார்கள், அந்த வீட்டில் போய் சவுண்டி சாப்பாடு சாப்பிடுவதற்கு அந்த இளைஞர்கள் படுகின்ற வேதனை மிகக்கொடுமை. யாராவது சொந்த சாதியில் ஒரு வெட்டியான் சாதியை வைத்திருப்பார்களா? ஏன் அப்படி இருக்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள். இந்த சனாதனம் என்கின்ற மனநிலை அதை உருவாக்கும். உயர் சாதிக்காரர்கள் தனது வேலை என்று திறந்தவெளி எல்லாமே கீழ்



**பார்ப்பனரல்லாதவர் எல்லோரையும் சூத்திரன் என்று சொல்லும் பொழுது கோபம் வருகிறதா? இந்த இடத்தில் நமக்கு சமூகமாகக் கோபம் வருகிறதல்லவா? அதே கோபம் ஒவ்வொரு படிநிலையில் தனக்கு கீழே ஒருவர் அதற்கு கீழே ஒருவர், அவர்களுக்கும் கீழாக அவரவர் வீட்டுப் பெண்கள் என்று சொல்லிச் சொல்லி மனிதனை மனத்தளவில் கொடூர நோயாளியாக்கிய தர்மத்திற்குப் பெயர் தான் சனாதனதர்மம், அது யாரையும் விட்டு வைக்காது.**

எதையுமே செய்யக்கூடாது, ஏன் இந்தியாவில் கழிவறை கட்டுகிறோம், தண்ணீர் வைக்கிறோம். ஆனால்கழிப்பறை சுத்தமாக இருக்கிறதா? எங்காவது குறிப்பாகப் பெண்களால் பப்ளிக் டாய்லெட்டுக்கு போகமுடியுமா? ஆண்களுக்கு திறந்தவெளி எல்லாமே டாய்லெட்டுதான். கழிப்பறைகளில் தண்ணீர் இருந்தால் கூட ஏன் சுத்தமாக இல்லையென்றால், தன்னுடைய மலத்தைக் கூட சுத்தம் செய்வது என்வேலை இல்லை அதற்கு ஒரு ஜாதி இருக்கிறது என்று பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. நம் வீட்டில் இருக்கும் கழிப்பறையைக் கூட சுத்தம் செய்வதற்கு வேறு ஒருவர் வருவார் என்று உடல் உழைப்பை ஜாதியாக்கி மனிதர்களை கேவலப்படுத்திய அந்த சனாதனம்தான் இன்றைக்கு இந்தியாவில் பல்வேறு வகையில் ஏராளமான பொருட் செலவில் வளர்க்கப்படுகிறது. இந்த அடிப்படையை முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

முடிவுரையில் சொல்ல நினைப்பது என்னவென்றால் இன்றைக்கு இருக்கும் அரசியல் சாசனம் பல்வேறு சிக்கல்களை உடையது என்பது உண்மைதான். ஆனால் இந்த சிக்கல்களோடு இந்த அரசியல் சாசனத்தை கொண்டு வருவதற்குத்தான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பாடுபட்டார். இரண்டாவதாக காந்தியையும் கான்ஸ்டிடியூஷனையும் கொஞ்சம் வித்தியாசமாகப் பார்க்க வேண்டும். காந்தி இந்தியாவின் தேசிய இயக்கத்தின் தலைவர் ஆனால் அவர் பட்டியலின மக்களின் பிரச்சனையை எப்படிப் பார்த்தார், அவரை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் எப்படி எதிர்கொண்டார், இந்த வரலாற்றை எழுதினால் காந்தியினுடைய வாழ்க்கை நமக்கு உவப்பாக இருக்காது. ஆனால் இன்றைய இந்தியா கோட்சேக்களை கும்பிடுகிறவர்களால் நடத்தப்படுகிறது. கோட்சேவினுடைய அஸ்தியை பாதுகாக்கின்றவர்களுடைய ஆட்சியாக இருக்கிறது. இந்த கோட்சேக்களின் கும்பலில் காந்தி வேறு மாதிரியான மரியாதைக்குரியவர். மதச்சார்பின்மைக்காக அவர் நம்பிய கருத்திற்காக கொல்லப்பட்ட மாமனிதர். கொல்லப்பட்ட காந்தியின் மீது கொண்ட மரியாதையால் தான் காந்திதேசம் என்று இந்த நாட்டிற்கு பெயர் வைக்க வேண்டும் என்று தந்தை பெரியார் சொன்னார். அப்படித்தான் இந்திய அரசியல் சாசனமும் பல குறைகளை உடையது தான். அதை நானே கொளுத்துவேன் என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார், ஆனாலும் இந்தியாவில் இன்றைக்கு வரை நாம் இந்த அளவிற்காகவாவது உரிமையுடன் இருப்பதற்கு காரணம் அவர் உருவாக்கிய அரசியல்சாசனம் தான். இன்றைக்கு அதை ஒழிக்க வேண்டும், என்று சொல்பவர்கள், அதாவது சனாதனிகள் அன்றைக்கே அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சொன்னார் என்பதாகச் சொல்ல வருகிறார்கள். அரசியல் சாசனங்களை ஒழித்துவிட்டு எதைக் கொண்டு வரபோகிறீர்கள் என்றுகேட்டால், இருபது ஆண்டுகளுக்கு முன்பு தி ஏசியன் ஏஜ் என்கிற ஆங்கிலப் பத்திரிகையில் தி டிராப்ட் கான்ஸ்டிடியூஷன் ஆப் ஆர்.எஸ்.எஸ். (*The Draft Constitution of RSS*) என்று இரண்டு பக்க செய்தி வெளிவந்தது, அதில் என்ன சொல்லப்பட்டதென்றால், ஆர்.எஸ்.எஸ். ஏற்கனவே தனது அரசியல் சாசனத்துடன் தயாராக இருக்கிறது. அந்த கான்ஸ்டிடியூஷன்-படி இந்த நாடாளுமன்றத்திற்கு மரியாதை கிடையாது. நாட்டை ஆளப் போவது குருசபா என்று அன்றைக்கே எழுதி வைத்திருக்கிறார்கள். இன்று நாட்டை ஆள்வது யார்? ஆர்.எஸ்.எஸ்-ன் குருசபை நாட்டை ஆள்கிறது. அவர்கள் தான் அரசை நடத்துகிறார்கள். ஏன் பிரதமர் நாடாளுமன்றம் நடக்கும் பொழுது வெளிநாட்டிற்கு போகிறார்? ஏன் உடனே திரும்புவதில்லை?

வழி தெரியாமலா? ரிடர்ன் டிக்கெட்டை விட்டுவிட்டாரா? நாடாளுமன்றத்தின் மீது அவர்களுக்கு மரியாதை இல்லை. நாடாளுமன்றத்தை அவர்கள் மதிக்கவில்லை, எங்களுக்கு நாடாளுமன்றம் தேவையில்லை. எங்களுடைய சட்டம் வேறு ஆர்.எஸ்.எஸ்.இன் திட்டத்தைப் பற்றி அன்றைக்கு அந்தப் பத்திரிக்கையில் எழுதியதை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குறிக்கோளை நோக்கிப் போவதற்கு நமது அரசியல் சாசனத்தை குறைபாடுடையது, என்றும் அதை அண்ணல் அம்பேத்கர் அவர்களே எதிர்த்தார் திரும்ப திரும்பச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட இடத்தில் தான் நாம், ஜனகனமன என்று புரிகிறதோ இல்லையோ அது தான் தேசியகீதம் என்கிறோம். அது எப்பொழுது நல்ல தேசியகீதமாக தோன்றுகிறது என்றால் வந்தேமாதரம் பாடு என்று சொல்லும் பொழுது, எங்களுக்கு ஒரே தேசியகீதம் அது ஜனகனமனதான், என்கிறோம் அல்லவா? அதே போல் இன்றைக்கு இந்திய அரசியல் சாசனத்தை அழிக்க நினைக்கின்ற சனாதனத்தை, ஒழிக்க நமது அரசியல் சாசனத்தைக் காக்க வேண்டும்.

ஆகவே சனாதனப் பயங்கரவாதத்தைந் புரிந்து கொள்வதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக இந்த கருத்தரங்கை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். இந்த வாய்ப்பை அளித்ததற்காக விடுதலைச் சிறுத்தைகளுக்கு நன்றி கூறுகிறேன், வணக்கம்.

**(11.01.2019 அன்று சென்னை அடையாறு திருவாவடுதுறை ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சனாதன பயங்கரவாதம் எதிர்ப்புக் கூட்டத்தில் பேசியது)**



▪ மார்ச் 3, 2012 இந்திய ராணுவத்துக்கு, புதிய தலைமை தளபதி – லெப்டினென்ட் ஜெனரல்வி க்ரம்சிங் நியமிக்கப்பட்டார்.

# பெண்ணியம் பற்றிய புரிதல்

பரந்த பாரத தேசத்தில் பெண்மையைப் போற்றும் வண்ணம் பழந்தமிழ் இலக்கியம் தொட்டு இன்று வரை பேசப்பட்டு வருகிறது. பெண்ணியம் என்ற சொல்லும் இயக்கமும் தமிழகத்தில் முத்திரைப் பதித்து வருகிறது. பெண்ணியம் என்ற சொல்லுக்கு பொருள் என்னவென்றும் அதைப்பற்றிய புரிதல் அவசியம் நமக்கெல்லாம் தேவை என இந்தக் கட்டுரையில் வலியுறுத்தி கூறுவதில் பெருமை கொள்கிறேன்.

## பெண்ணியம் சொல்லின் பிறப்பிடம்

பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்ற பொருளில் *Feminism* என்னும் ஆங்கிலச் சொல் *Femina* எனும் இலத்தீன் மொழியில் இருந்து பிறந்தது என்றே கூறுகிறார்கள். தமிழில் பெண்ணியம், மகளிரியல், பெண் நலக் கொள்கை, பெண்ணிலைவாதம் போன்ற சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

## குறிக்கோளும் செயலாக்கமும்

இன்றையச் சூழலில் பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன, சமூக, கலாச்சார மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமாகவே கருதுகிறார்கள்.

## பெண்ணியம் பல்வேறு குறிக்கோள்களை கொண்டது

- பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்கப் போராடுதல்
- ஆண், பெண் இருபாலரும் சமத்துவ உரிமைகளை ஒன்றாக இணைந்து நிலைநாட்டுதல்
- போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- பொருளாதார சுதந்திரம் பெற்றுத் தருதல்



## கா.ந.கல்யாணசுந்தரம்



- ஆணாதிக்கத்தைக் கண்டறிந்து அகற்றுதல்
- பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளைக் களைதல்
- பெண்களின் நலனைப் போற்றிப் பாதுகாக்கும் சட்டங்களை வடிவமைத்து செயல் படுத்துதல் போன்ற குறிக்கோள்களைக் கொண்டு பெண்ணியம் ஒரு இயக்கமாக அடையாளம் காணப்படுகிறது.

### பெண்ணியத்தின் வரலாறு

1885 ஆம் ஆண்டிலேயே காசிம் அமீன் என்பவர் புதுமைப்பெண் (*THE NEW WOMAN*) என்ற நூலை எழுதி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பின்னர் நமது மகாகவி சுப்ரமணிய பாரதியார் “ வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் “ என்று புரட்சி வரிகளை எழுதினார். புதுமைப்பெண்கள் வெளியில் வரவேண்டும். ஆடவருக்கு இணையானப் பணிகளைச் செய்யவேண்டும் எனவும் கூறினார். தொடர்ந்து பெண்மையின் சிகரமாக , சரோஜினி தேவி, அன்னிபெசன்ட் அம்மையார், நிவேதிதா, அன்னை தெரசா, அன்னை இந்திரா போன்றோர் மிகச்சிறந்த ஆளுமைகளாக இருந்தனர். தமிழகத்தில் வேலு நாச்சியார் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டவர்.

பக்தி இலக்கியத்தில் ஆண்டாள், காரைக்கால் அம்மையார் போன்றோர்கள் சிறந்த ஆளுமைக் கவிஞர்களாகத் திகழ்ந்தார்கள்.

இவர்களைக் காட்டிலும் ஈரோட்டுச் சிங்கம் என்றழைக்கப்பட்ட ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் பெண்ணியத்திற்காகப் பிரசாரம் செய்தார். ஆணுக்கு நிகராக ஆடை அணியவேண்டும் என்ற வேள்வி நடத்தியவர். இப்படிப் பல்வேறு நிலைகளில் பெண்ணியம் காக்கப்பட்டது சரித்திரத்தில் நிலைபெற்றுள்ளது. இன்று அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியுள்ளது அரசியல் சட்டம்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க “நிர்பயா பெண்கள் பாதுகாப்பு சட்டம்” இயற்றப்பட்டுள்ளது.

ஆணுக்கு நிகரான பெண்ணியத்தைக் காக்கும் பொறுப்பு இன்றையச் சூழலில் அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு.

பண்பாட்டுக் கட்டமைப்பு, தாய்வழிச் சமூகம், தந்தைவழிச் சமூகம், பாலியல் பணிவேறுபாடு, அதிகாரம் மற்றும் விடுதலை போன்ற கோட்பாடுகளில் கருத்து ஆக்கங்கள் செயல்பட்டு வருகிறது என்பது இந்திய மண்ணின் பெருமை.

பெண்களே நாட்டின் கண்கள்
இனி வேண்டாம் எப்போதும்
பெண்ணடிமை
என்று இக்கட்டுரை வழி எடுத்துக்கூறுகிறேன். ●

# பகுத்தறிவில் புத்துலகம் காண்!



மக்கள் தொகையில் அளப்பரிய வளம் கண்ட நாடு!
இக்கால பொருளாதாரச் சிந்தனைக்கு...
கேள்விக்குறிகளால் நிறைந்த நாடு!
தனியொருவனுக்கு உணவில்லையெனில்
இந்தச் சகத்தினை அழித்திடுவோம் எனவியம்பி
நாட்டின் வளமைக்கு கோடிட்டுக்காட்டினான் பாரதி!
தன்னிறைவில் இன்னும் இலக்கை எட்டாத
பின்னடைவில் உள்ளதே நம்நாடு!
புரட்சி விதைத்தப் பெரியாரை மறந்ததே நாடு!

எண்ணங்களால் வண்ணங்கள் காணலாம்!
வண்ணமயமான வாழ்வு வேண்டுமெனில்
திண்ணிய இலக்கோடு பகுத்தறிவும் வேண்டுமிங்கே!
திட்டமிடல் செயலாக்கப் படவேண்டும்!
ஏட்டளவில் சொல்லளவில் இருப்பதாலே
எட்டாக்கனியானது தனிமனித மேம்பாடு!
நாற்காலியில் அமர்ந்தால் மட்டும் போதுமா?
நற்செயல்கள் ஆற்றிட வேண்டாமா?

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!
ஒட்டிய வயிறுக்கு சோறிட்டுப் பசியாற்ற முடியும்!
பிற்போக்கு எண்ணங்களால் மந்தபுத்தி தலைமைகள்
தற்குறியாய் வாழ்வதாலே பொலிவிழந்து போனது நாடு!
நெஞ்சம் நிமிர் ...மூடத்தன செலவினங்களைப் பொசுக்கு!!
திட்டமிடும் முன்பே பொருளாதாரத்தை ஆய்வு செய் !
புதுமை புகுத்தும் முன்பே அறிவார்ந்து திட்டமிடு!
பகுத்தறிவால் மண்மீது புத்துலகம் காண்!

– கா.ந.கல்யாணசுந்தரம்



■ மார்ச் 4, 2012 பிகாரில், உலகக் கோப்பை கபாடி பெண்கள் பிரிவில் இந்திய அணி தங்கப்பதக்கம் வென்றது.

# உயிர்மெய்

குணநீதி பதற்றத்துடன் பொன்மதியிடம் செல்பேசியில் "அம்மா அப்பாவை காணோம்மா"

"அய்யய்யோ... என்னடா சொல்ற, எப்படிடா நல்லா பார்த்தியா...? பொன்மதி பதறினாள்.

"அம்மா... அழாதீங்கம்மா... காலையில அவர் அறைக்குள் பார்த்தேன். இல்லைம்மா... எல்லா இடத்திலும் தேடிட்டோம். இல்லைம்மா... மேடத்திடம் சொல்லிவிட்டேன், பயப்படாதீங்க" "அய்யோ... நான் என்ன செய்வேன்? அரிமா... அரிமா" என்று கத்தியபடியே அவனை கூப்பிட்டாள்.

அரிமா ஓடிவந்தான். அண்ணியின் பதற்றத்தைப் பார்த்துப் பயந்து, "அண்ணி, என்னண்ணி ஏன் கூப்பிட்டீங்க"

"அரிமா, குணா பேசறேன். அண்ணனை உண்மையிலே காணோம்றான் ஒண்ணும் புரியல.... நீ பேசு" என்றபடியே செல்லைக் கொடுத்தாள்.... வேகமாக

"குணா.... என்னடா சொல்லு" என பதறினான்.

"சித்தப்பா.... அப்பாவை காலையிலிருந்து காணோம். தேடறோம், அவ்வளவு சாதாரணமா யாரும் உள்ள வந்திட முடியாது. அவரா வெளியில் போனாதான் உண்டு. உங்களுக்கு கூட நாங்கயிருக்கிற இடம் தெரியுமான்னு எனக்கு தெரியல" செம்மொழியின் கடலூர் வீடுதானே அண்ணி, சொன்னாங்க. யாரும் நம்ம சம்மந்தப்பட்டவங்க போகாமலிருப்பது நல்லதுன்னு முடிவெடுத்ததாலே நான் வரல.... நீயும் உன் நண்பர்களும் பங்களாவில் தானே இருந்தீங்க... அப்புறம் எப்படிப்பா எனக்கே கலக்கமாயிருக்குப்பா... அண்ணி நீங்க அப்படியே உட்காருங்க அண்ணன் நல்லாயிருப்பார். கவலைப்படாதீங்க... குணா ஒண்ணுமில்ல அம்மா கொஞ்சம் பதட்டமாயிட்டாங்க.... நீ வரவேண்டாம்... நீ வேலையை பார் நான் பாத்துக்கிறேன்" என்றபடியே அண்ணியிடம் "செம்மொழியிடம் பேசுங்க அண்ணி" என்றான்.

"அரிமா செம்மொழி, கிடைக்கல, டெல்லியிலிருந்து சீக்கிரம் வந்துடுவதாக நேற்றுதான் சொன்னாள். என்ன வேலையோ எங்கிருக்கோ... அரிமா என்னப்பா இப்படியாயிடுச்சி"

"அண்ணி நீங்களே கலங்கிட்டா, நானெல்லாம் என்னாவது, கொஞ்சம் ஓய்வெடுங்க. நான் இனமாறனிடம் பேசறேன்" அரிமா சொன்னவுடன் பொன்மதி.

"உடனே பேசுப்பா" என்றார்.

இனமாறனுக்கும் தொடர்பு போகலை..... ஆனா அவன் அலுவலகத்தில் இனமாறன் டெல்லிபோய் இரண்டு நாட்கள் ஆனதாக சொல்லி விட்டார்கள்.

..........................

"காலம் புறாவைப் போல பறந்திடும், மானைப் போல் ஓடிவிடும்" என்று எழுத்தால் எழ வைக்கும் கலைஞர் அன்று ஒரு திரைப்படத்தில் எழுதிய வசனத்தை நினைக்கும் வண்ணம் செய்திகள், தகவல்கள் இதழ்களும் ஊடகங்களும் கட்டுரைகளும், விவாதங்களும் நாளும் பொழுதும் சூடு பறந்தன.

ஆகாயத்தில் கோட்டைக்கட்டி கற்பனையில் குடியேறியவர்கள் பொய்யும் பித்தலாட்டமும் விற்பனையாகாமல் கிடந்தார்கள். எங்கும் போராட்டம், கிளர்ச்சி, கைகட்டி சேவகம் செய்த அதிகாரிகளிடம் மாற்றம் தெரிய ஆரம்பித்தது.

டெல்லி நெருக்கடி, மந்திரிகளின் உளறல். அதிகாரிகளின் ஒத்துழையாமை. பத்திரிகை ஊடகங்களில் ஒருசிலதைத்தவிர மற்றவை குதிரைப்பேர ஆட்சியின் கொள்ளைகளை வீதிக்குக் கொண்டு வந்தன. எதைப்பற்றியும் கவலைப்படாமல் கண்டெய்னரைத் தேடினர். மந்திரிகள், முதல்வரோ, சிலருடன் உட்கார்ந்து தரமில்லாத மின்மீட்டர்கள் வாங்கினால் எத்தனை கோடி வரும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு மந்திரி திடீர்னு ஓடிவந்து,

"அண்ணே அறிவேந்தியின் நம்பிக்கையான முத்தையாவை கொண்டு வந்திட்டோம். கண்டெய்னரை அறிவேந்தியே கடத்தி இருக்கான்"

நம்மளை விட கிரிமினலாக இருக்கானே, எப்படியோ அவனை புடிச்சா கண்டெய்னர் கிடைச்சிடும். யோவ் போயா... முத்தையாவை தூக்கிட்டு போய் அறிவேந்தியை முதல்ல புடி"

"அந்த ஆள் எங்க தொலைஞ்சான்னு இவனுக்கும் தெரியல"

"பத்தாயிரம் கோடியுடன் நாடகம் ஆடறானா?"

"அண்ணே, இரண்டு கண்டெய்னர் நம்மகிட்டதான் இருக்கு"

"போ.... யா.... ரெண்டில் இருந்த நோட்டுக்களை ஒரே வண்டில கொண்டு போய்ட்டான். பாவிப்பய, யார் யாருக்குன்னு கணக்குப்பண்ணி பிரிச்சதுயா, முட்டாத்தனமா அவன் தோப்புக்கு போய் வண்டிகளை விட்டது தப்பு"

"பயந்தவன்னு நினைச்சி, ஓவரா பேசிட்டோம். தப்புதான். முத்தையாவை அவன் வீட்லயே உளவா போட்டுடுவோம். ஏதாவது விபரம் கிடைக்கும்"

"சொல்லாதே செய், போ.... சே.... எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சின்னு கூட சொல்ல முடியில..... ம்....... சரி ஜோஸ்யரிடம் கேட்டு யாகத்தைத் தொடங்கிட வேண்டியதுதான்" என்றபடியே அவர்கள் மின்மீட்டர்களுக்குள் நுழைந்தனர்.

6

.........................................

நல்லதம்பியும், அரிமாவும் முத்தையாவும், பொன்மதி பதற்றமின்றித் தெளிவாகப் பேசியதைப் பார்த்து ஆச்சரியமானார்கள். அறிவைப்பற்றி தகவல் வந்திருக்கலாம்..... அதான் மாறுதலை தந்திருக்கிறது என்று யூகம் செய்த நல்லதம்பிதான் தகவலைத் தெரிந்துகொள்ள,

"பொன்மதி அறிவை பற்றி புதிய செய்தி உண்டாமா? நாங்களும் வேதனையில் தான் உள்ளோம். சொல்லுமா" பொன்மதி. "அண்ணே, அவருக்கு ஒண்ணும் ஆகியிருக்காதுன்ற நம்பிக்கைதாண்ணே, தேநீர் போடறேன். முத்தையா...? என்று அவனைக் கூப்பிட்டார்.

"அம்மா, சொல்லுங்கம்மா கவலைப்படாதீங்கம்மா,

 ▪ மார்ச் 5, 1979 வியாழனின் துணைக் கிரகமான "சுயோ'வில் எரிமலை இருப்பதை அமெரிக்காவின் வாயேஜர்-1 கண்டுபிடித்தது. 

கடலூர் இள.புகழேந்தி

எனக்கும் நம்பிக்கை இருக்கும்மா, உங்களைப் பார்த்ததும் தான் தைரியம் வந்திடுச்சிம்மா, எல்லாம் ஆண்டவன் பாத்துக்குவான்.... சொல்லுங்கம்மா..... கூப்பிட்டிங்க"

"நம்மை ஆண்டவர் தான் இயற்கையுடன் இணைந்து விட்டதே. சரி.... உன்னை மாதிரி நல்லவன். அய்யா கூடவேயிருந்தது மகிழ்ச்சியாயிருக்கு முத்தையா பால் இல்லை நீ"

"நான் வாங்கிட்டு வரம்மா? எப்பவும் நான் உங்க வீட்டுப் பணியாள்தாம்மா" என்றபடியே காசை வாங்கிகிட்டு வேகமாகப் பால் வாங்கப் போனான்.

பொன்மதி, அவன் வெளியே போனதும்,

"அரிமா, அவன் போயிட்டானான்னு பாரு கதவை சாத்திட்டு வான்னு சொல்லிட்டு "அண்ணே அவரு நல்லா இருக்காருண்ணே"

"அறிவே பேசனான்னம்மா"

"அண்ணே, அரிமா, ரொம்ப ரகசியமா சில வேலைகள் நடக்குது அதான் செல்லில் கூட சொல்லல என்ன அரிமா, செம்மொழிகிட்ட பேசினீயா?"

"அண்ணி, எத்தனைமுறை போட்டாலும் எடுக்கவேயில்ல எப்பவும் உடனே பேசிடும். ஏன் பேசலைன்னு தெரியல செம்மொழியை கூட நம்ப முடியல அண்ணி"

"அரிமா, நாம் நடத்துறது நினைக்க முடியா அளவுக்கு பெரிசாயிடுச்சு மத்திய- மாநில அரசுகளை ஒரு வகையில் எதிர்த்து நிக்கறார் ஓங்கண்ணன். இதுவரை இந்தியாவுல இல்லாத ஒரு புரட்சி நடக்குது"

நல்லதம்பி ஆவல் மேலிட

"என்னம்மா சொல்ற" எனக் கேட்க,

"ஆமாண்ணே மோசமான அரசியல்வாதிங்க ஒருபுறம், அவர்களுக்குத் துணைபோகும் கடமைமறந்த அதிகாரிகள் ஒருபுறம் என்று எல்லோரும் பேசிடறோம். ஒண்ணை மறந்திடறோம். மோசம், என்கிற போதும் கடமையை மறந்தவர்கள் என்கிற போதும் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்றாலும் நியாயமான அரசியல்வாதிகளும் கடமைவீரர்களான அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதை மறந்திட கூடாதுண்ணே. இந்த கண்டெய்னர் பிரச்சனையில் நாம எதிர்பார்க்காத ஒன்று உண்மையை வெளியே கொண்டுவர நல்ல அதிகாரிகள் அலுவலர்கள் ஒன்றுபட்டு செயல்படுகிறார்கள். ஒரு புதிய பரிணாமத்தை நாடு காணப்போகிறண்ணே. அரிமா, இப்ப சொல்றேன் உன் கல்லூரித்தோழிக்கு செம்மொழின்னு பேர் வைச்சதே அண்ணன்தான். இன்றைக்கு அவள் படிச்சி *IPS* அதிகாரியா வந்திருக்கான்னா பெண்கள் கல்விக்கும் உரிமைக்கும் போராடிய தலைவர்களுக்கு கிடைத்த வெற்றி அதிலும் குறிப்பா நம்ம அய்யா பெரியாரின் வழி வந்த செம்மொழி நேர்மையும், கடமை உணர்வுடனும் பணிபுரிவது அவருக்கான தனிமரியாதை. இதை ஏன் சொல்றன்னா.... செம்மொழியின் முயற்சியால் தான் அதிகாரிகள் இணைந்தனர். அவரு களத்தில் இறங்கியதிலிருந்து செம்மொழியின் இல்லத்தில் இருந்தார்னு உங்களுக்கு தெரியும்., குணாவும் அவன் நண்பர்களும் இருந்தனர். ஆனால் வெளியே தெரிஞ்சால் எல்லோருக்கும் ஆபத்து. செம்மொழிக்கும் கூட, அவரை பிடிச்சிட்டா கண்டெய்னர் கதைகள் மாற்றப்படும். மொத்தமும் நாசமாயிடும்"

அரிமா குறுக்கிட்டான்.

"பெரிய காவல்துறை அதிகாரி வீட்ல இருப்பது அதுவும் படுரகசியமா.... எப்படி அண்ணி..... எனக்கு ஒரு சந்தேகம் செம்மொழி யாருக்கோ பயந்திருக்கலாம். அண்ணன் என்பதால் நல்லது செய்ய நினைச்சி இப்ப முடியாமல் போயிருக்கலாம். அதெல்லாம் இருக்கட்டும் அண்ணி, இப்ப அண்ணன் எங்கயிருக்கார். எப்படியிருக்கார் அதைச் சொல்லுங்க" என்று உணர்வுவயப்பட்டவனாக வார்த்தைகளில் வேகமானான். "இரு அரிமா நீ சொல்லுமா...



கேட்கவே கற்பனையை விட, உண்மை திருப்பங்களுடன் உள்ளது" என்ற நல்லதம்பி அறிவின் பாதுகாப்பு குறித்து, பொன்மதியே நம்பிக்கையாயிருக்கும்போது, கவலைப்படாமல், சம்பவ அடுக்குகளைக் கவனிக்கலானார்.

பொன்மதி, அரிமாவை பாசப்புன்னகையுடன் பரிவுடன் பார்த்து "அரிமா நீ சொன்னது ஒருவகையில் உண்மைதான். செம்மொழியும் பயந்தாள்" சற்று நிறுத்தி "அரிமா, முத்தையாவை மந்திரிகள் விலைக்கு வாங்கிவிட்டது செம்மொழிக்குத் தெரிந்துவிட்டது. அவன் வீட்டை நோட்டமிட இனமாறனால் நியமிக்கப்பட்டக் காவலர்கள் விடுதலையும், முரசொலியும் முத்தையாவின் நடவடிக்கைகளைத் துல்லியமாப் பார்த்து வருவதால் அறிய முடிந்தது. இப்பபுரியுதா முத்தையாவை பாலிருக்கும்போது பால் வாங்கிவர அனுப்பியது."

அரிமா இன்னும் தெளிவாகலை.

"அண்ணி இப்ப அண்ணன்"

சிரித்துக்கொண்டே பொன்மதி,

"பாத்தீங்களா அண்ணே, அரிமாவை, துடிக்கிறான். அரிமா இப்ப ஓங்கண்ணன், யாருக்கும் தெரியாமல் உடனுள்ள குணாவுக்கு ம் தெரியாமல் இனமாறன் இல்லத்திற்கு மாற்றப்பட்டுப் பாதுகாப்பாகவும் போராட்டத்தின் இறுதிக்கு வெற்றியாய் தயாராகி வருகிறார் போதுமா" என்றாள்.

"அண்ணி இதுபோதும் அண்ணி"

கலங்கினான் அரிமா.

"அரிமா, கண்ணை தொடை, அண்ணன் காட்டும் வழியில் நிறைய கடமைகள் உள்ளன. இன்னும் ஓரிரு நாட்கள்தான்.

"அண்ணி, யாருக்கும் தெரியாம எப்படி அண்ணி அண்ணனை இடமாற்றம் செய்ய முடியும்"

"இன்னும் நீ அங்கயே இருக்கிறீயா வெளியில் வா,

"தமிழ்நாட்டின் கடமைத்தவறாக் காவலர்கள் நினைத்தால் உனக்கே தெரியாமல் உன்னையே மாற்றிவிடக்கூடிய திறன்வாய்ந்தவர்கள்" என்று பொன்மதி சொல்ல, நல்லதம்பி வாய்விட்டுச் சிரிக்க, முத்தையா உள்ளே வந்தான். சிரிப்பிற்கான அர்த்தம் புரியாமல் சந்தேகத்தோடு கேட்டான்.

"அம்மா, அய்யா நல்லாயிருக்கிறாரா? எங்கம்மாயிருக்கார்"

"முத்தையா, முதல்வர் தொலைக்காட்சியில் இப்பதான் சொன்னார். நாளைக்கு அய்யாவுடன் பேட்டித்தருவேன் என்று" பொன்மதி சொல்ல, முத்தையா நினைத்துக்கொண்டான்.

"அவனைப்போய் நம்பறாங்களே! நாளைக்கு நிருபர்கள் கேட்டா சிரிச்சிக்கிட்டே நான் பேச்சு மாறமாட்டேன், என் பேட்டியை மறுபடியும் கேளுங்க, நான் சொன்னது நாளைக்கு அறிவேந்தியுடன் பேட்டித்தருவேன் என்றுதானேனு சொல்லிக்கிட்டே போய்டுவான். பாவம் விபரமறியாமல் இருக்காங்க என்று" வெளியில் ஒரு சிரிப்புடன் நின்றான், முத்தையா.

– தொடரும்



▪ மார்ச் 6, 1967 அண்ணாவுடன் 9 பேர் கொண்ட மந்திரி சபை தமிழகத்தில் பதவி ஏற்றது.

# ■ நூல் அறிமுகம்

# திராவிடம் அறிவோம்




திராவிடக் கருத்தியல் தோன்றிய காலம் தொட்டே அவற்றின் மீதான பொய்கள், திராவிடத் தலைவர்கள் மீதான கட்டுக்கதைகள், திராவிட இயக்க வரலாற்றை முலாம் பூசி பரப்புதல் போன்ற செயல்களைச் சனாதனச் சக்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடங்கிவிட்டன. இன்றைய காலகட்டத்தில் குறிப்பாகச் சமூக வலைதளங்களில் உண்மைச் செய்திகளுக்கும், திரிபுச் செய்திகளுக்கும் வேறுபாடு தெரியாமல், ஆராயாமல் பெரும்பாலும் திரிபுச் செய்திகளே தொடர்ச்சியாகப் பலராலும் பரப்பப்படுகின்றன.

இயந்திரமயமான உலகில் பொறுமையாக, அதிகப் பக்கங்களைக் கொண்ட புத்தகத்தை வாசிப்பதற்கு புதிய வாசகர்கள் தடுமாறுகின்றனர். இதனால் பல நேரங்களில் புத்தக வாசிப்பைத் தவிர்ப்பதையும் காணமுடிகிறது. காலத்தின் தேவை கருதியும், உண்மையான திராவிட வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு ஆதாரத்தோடு கொண்டுசேர்த்தலின் அவசியத்தை உணர்ந்தும், வரலாற்றுச் செய்திகளை இந்நூலாகத் தொகுத்துள்ளார் ஆசிரியர் வெற்றிச்செல்வன்.

திராவிடச் சொல்லின் பயன்பாடு, அரசுப் பணி, கல்வி, பெண்ணுரிமை, பள்ளிகளில் மதிய உணவு, இந்து அறநிலையச் சட்டம், வருணாசிரம ஒழிப்பு, சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, ஆலய நுழைவுப் போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு, தமிழ் வளர்ச்சி, சட்டத் திருத்தம், பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், ஈழ மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள், சமத்துவம், சமூகநீதி போன்ற பல்வேறு தளங்களிலும் திராவிட இயக்கச் செயல்பாடுகள் ஆதாரங்களோடு தொகுக்கப்பட்டுள்ளன.

“சுருங்கச் சொல்லி விளங்க வை” என்ற பழமொழிக்கேற்ப அவசியமான செய்திகளைக் கொண்டு அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளது இந்நூல். வரலாற்றின் மீதான நம் கண்ணோட்டத்தை மீண்டும் மீண்டும் ஆராயச் சொல்லி அதன் அவசியத்தை ஒவ்வொரு செய்தியும் வலியுறுத்துகின்றது.

திராவிடக் கருத்துகள், இயக்கங்கள், செயல்பாடுகள் பற்றி தொடர்ந்து பொய்ப் பரப்புரைகள் செய்யும் சனாதனச் சக்திகளுக்கும், ஆரிய அடிவருடிகளுக்கும் சவுக்கடி தருகிறது கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் வெளியீடாக வந்திருக்கும் இந்நூல். ”திராவிடம் பற்றிய திரிபு வாதங்கள் திட்டமிட்டே கட்டவிழ்த்து விடப்படும் இன்றையச் சூழலில், இந்நூல் பல உண்மைகளை உரத்துச் சொல்கிறது” என்று நூலைப் பற்றிய அறிமுகத்தில் கூறுகிறார் பேராசிரியர் சுப. வீரபாண்டியன். திராவிடம் அறியாதவர்கள் அறியவும், அறிந்தவர்கள் தெளியவும் நிச்சயம் வாசிக்க வேண்டிய புத்தகம் “திராவிடம் அறிவோம்.”இது போன்ற இன்னும் ஆயிரம் ஆயிரம் வரலாற்றுச் செய்திகளை ஆசிரியர் வெற்றிச்செல்வன் தொடர்ந்து தொகுத்து புத்தகமாக்க வேண்டும்.”

**– செ. சுரேஷ்குமார்.**

**நூல் கிடைக்குமிடம்:**
**122/130, என்.டி.ஆர். தெரு,**
**ரெங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை 24.**
**044–42047162, 9994113558**

## நூலாசிரியர் அறிமுகம்

இந்நூலாசிரியர் வெற்றிச்செல்வன் பெரியாரிய-அம்பேத்கரியச் சிந்தனையாளர். பேராசிரியர் சுபவீயை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும், ‘கருஞ்சட்டைத் தமிழர்’ மின்னிதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார். ‘விடுதலை’, ‘தி இந்து (தமிழ்)’, ‘உண்மை’, ‘கைத்தடி’, ‘பெரியார் பிஞ்சு’ உள்ளிட்ட இதழ்களில் இவருடைய படைப்புகள் வெளிவந்துள்ளன.

■ மார்ச் 9, 2012 இந்தியாவின் சுவர் எனப்படும் ராகுல் திராவிட் (16 ஆண்டுகள்) சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு.

Dr. சிவராஜ் M.S. Ortho
எலும்பு மூட்டு மற்றும் முடநீக்குவியல் மருத்துவர், கோவை.



# மூட்டு தேய்மானமும் அதன் மருத்துவமும்

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பது அறிவியல். நான்கு கால்களில் நடந்து கொண்டும் மரத்திற்கு மரம் தாவிக்கொண்டும் வாழ்ந்த குரங்கினத்திலிருந்து பரிணாம வளர்ச்சியுற்று வந்த ஆதிகால மனிதன் இரண்டு கால்களை மட்டும் உபயோகித்து நிமிர்ந்து நின்றான். நடந்தான்.

அவனுடைய முழு எடையையும் இரு கால்களின் மூட்டுகள் மட்டுமே தாங்கின. அதாவது இடுப்பு பந்துக் கிண்ண மூட்டு, முழங்கால் மூட்டு மற்றும் கணுக்கால் மூட்டு ஆகியவை இங்கே இருந்து தான் கால்களில் மூட்டு தேய்வதும் ஆரம்பித்து இருக்க முடியும் என்று தொன்பொருள் ஆராய்ச்சியாளர்கள் நிறுவுகிறார்கள்.

மூட்டு தேய்மானம் (Osteo Arthitis) என்பது பாதிக்கப்பட்ட மூட்டு காலப்போக்கில் தேய்ந்து எலும்பின் மேல் உராய்வை தடுக்கும் பாதுகாப்பு கவசம் என்னும் (Joint Cartilage) முதலில் தேய்ந்து பின் எலும்பின் மேல் எலும்பு உரைவதால் ஏற்படும் மூட்டு அசைவு குறைவு, தசைகள் இறுக்கம் மற்றும் நாட்பட்ட வலியே ஆகும்.

மூட்டு தேய்மானம் அதிகமாக முழங்கால் (Knee) அடுத்து இடுப்பு (Hip) மற்றும் கணுக்கால் (Ankie) மூட்டுகளைப் பாதிக்கிறது.

## காரணங்கள்

1. அதிக வயதான இரு பாலருக்கும்
2. உடல் பருமன் அதிகமாக உள்ளவர்க்கு (பெண்களுக்கு முக்கியமாக)
3. பாழ்பட்ட மூட்டு சவ்வு (விளையாட்டு/விபத்தினால்)
4. உடல் உழைப்பின்மை
5. எலும்புகளின் வடிவத்தில் மாற்றம்

## மூட்டு தேயாமல் தடுக்க

1. வாழ்வியல் முறை மாற்றங்கள்



2. சிகிச்சை முறைகள்

## வாழ்வியல் முறை மாற்றங்கள்

1. உடற்பயிற்சி : அன்றாடம் தசைகளை வலுப்படுப்படுத்தும் படி

நடைப்பயிற்சி : ஏற்கனவே மூட்டு தேய்ந்து அவதிப்படுவோர்க்கு மேலும் வலியையே கொடுக்கும் அதற்கு மாற்றாக மிதிவண்டி மிதித்தல் (Cycling), நீச்சல் பயிற்சி (Swimming) நின்ற இடத்திலே செய்யும் உடற்பயிற்சிகள் (Standing Aerobics) செய்யலாம்.

Aqua Walking என்று சொல்லப்படும் நீச்சல் குள நடைப்பயிற்சி மூட்டு வலியின்றித் தண்ணீரில் நடப்பது என்பது தற்போது மேலை நாடுகளில் பிரபலமாகிவருகிறது.

2. உடல் எடை பராமரிப்பு : BMI என்னும் ஆரோக்கிய உடல் எடை மதிப்பீடு மூலம் ஒப்பிட்டு சரியான உடல் எடையை உயரத்திற்கு தகுந்தாற்போல் பராமரித்தல்.

3. உணவு முறை மாற்றங்கள் : உணவு முறை கலந்தாய்வு (Diet counselling) மூலம் உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்து உடல் எடை குறைப்பு மற்றும் சத்தான உணவு வகைகளை சரியான அளவில் உண்பது போன்றவை.

## மூட்டு தேய்மானம் - சிகிச்சை முறைகள்

கவனமாகkf புரிந்து கொள்ளவும். மூட்டு தேய்மானம் என்பது வயது முதிர்வினால்/ அதிக உடல் எடை/ மாறிவிட்ட எலும்புகளால் மூட்டு தேய்ந்து அதனால் வலி உண்டாவதே ஆகும். இதனை மேலும் தேயாமல் கட்டுப்படுத்த முடியுமே தவிர எந்த ஒரு மருத்துவமும் சரிப்படுத்தி விட்டோம் என்று கூற இயலாது. வயது அதிகமாகும் போது மேலும் மூட்டு தேயவே வாய்ப்புகள் அதிகம்.

உடல் எடை குறைப்பு, மூட்டு சத்து மருந்துகள், உடற்பயிற்சி என அனைத்தும் தேய்மானத்தைக் கட்டுப்படுத்தவோ அல்லது அதன் வேகத்தைக் குறைக்கவோ பயன்படும். வலி மருந்துகள் அப்போதைக்கு வலி நிவாரணம் அளிக்கும். ஆனால் பக்க விளைவுகள் கருதி அடிக்கடி உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.

மூட்டு எலும்பு சீரமைப்பு (Osteotomies) அறுவை சிகிச்சைகள் இயற்கையான மூட்டினை மறு சீரமைப்புச் செய்து சில வருடங்கள் அதிகமாக நமக்கு வலியின்றி பயன்படுமாறு செய்ய உதவுகின்றன.

மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை (Knee Replacement) இறுதிக்கட்ட முயற்சியாக நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், வீட்டிலேயே முடங்கி விடாமல் வலியின்றி வாழவும் வழி செய்கிறது.

மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை என்பது ஒருவரின் மூட்டை அப்படியே மாற்றி விடுவது அல்ல. மூட்டின் மேல் பகுதியில் உராயும் பகுதியை மட்டும் எடுத்து விட்டு உயர்தர உலோகம் மூலம் செய்யப்பட்டக் கவசம் பொருத்துவதே ஆகும். இதனால் மூட்டின் உராய்வு தடுக்கப்பட்டு நோயாளிகள் வலியின்றி அசைக்கவும் நடக்கவும் இயலும். இழந்த தங்கள் சமூக வாழ்வை மீட்டெடுக்கவும் முடியும். ●


▪ மார்ச் 12, 1918 ரஷ்யாவில் மாஸ்கோ தலைநகரமானது. முன்னர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தலைநகராயிருந்தது.

# குலை குலையா முந்திரிக்கா

பெற்றோர்களுக்கெல்லாம் மார்ச் மாதம் பிறந்ததும் தங்கள் குழந்தைகளைப் பள்ளியின் முழுஆண்டுத் தேர்வுக்குத் தயார் செய்வது என்பது கிட்டத்தட்ட போர்வீரர்களைப் போருக்குத் தயார் செய்வதற்கு ஒப்பாக இருக்கிறது, இன்றைய போட்டிகள் நிறைந்த உலகத்தில். அதிலும் குறிப்பாக பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் பிள்ளைகள் என்றால் அந்தப் பெற்றோர்களின் நிலை இன்னும் மோசம். அவர்களும் சேர்ந்தே தேர்வுக்கு தயாராகிறார்கள். இதற்கெல்லாம் பெற்றோர்கள் சொல்லும் காரணம் என்னவென்றால் குழந்தைகள் நன்றாகப் படித்தால்தான் யாரும் இவர்களை ஏமாற்ற முடியாது, நல்ல வாழ்கை அமையும், நல்ல வசதியோடு வாழ்வார்கள் என பல காரணங்களை அடுக்கிக்கொண்டே போவார்கள் பெற்றோர்கள். தன் குழந்தைகள் பிறரிடம் ஏமாறாமல் இருக்கவேண்டும் என்று ஆசைப்படும் பெற்றோர்கள் தன் குழந்தை பிறரையும் ஏமாற்றாமல் இருக்கவேண்டும் என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும். ஏனெனில் மனிதர்கள் எப்பொழுதும் இரண்டு பக்கம் கொண்ட நாணயங்கள் போன்றவர்கள் அவர்களின் ஒரு பக்கத்தை மட்டும் சரி செய்துவிட்டு மறு பக்கத்தை கண்டுகொள்ளாமலும் சரி செய்யாமலும் விட்டுவிட்டால் அவர்கள் செல்லாக் காசாகிப் போவார்கள். ஆகவே பிள்ளைகளை படிப்போடு, விளையாட்டு, ஒழுக்கம் என நற்பண்புகளையும் ஊட்டி வளர்ப்போம். குழந்தைகள் யார் தம்மை ஏமாற்றினாலும் அதைக் கண்டு பிடிக்கவும் தான் ஏமாறாமல் இருக்கவும் நமது குழந்தைகள் விளையாட்டின் வாயிலாகக் கற்றுக்கொள்கிறார்கள். அது என்ன விளையாட்டு என்று தெரிந்துகொள்வதற்கு நீங்கள் ஆர்வமாக இருப்பது தெரிகிறது. அதுதான் குலை குலையா முந்திரிக்கா அல்லது குலையா குலையா முந்திரிக்காய் என்னும் சிறுவர்கள் விளையாட்டு. இனி அந்த விளையாட்டை எப்படி விளையாடுவது? அது எப்படி பிள்ளைகளுக்கு படிப்பினையைத் தருகிறது என்று பார்ப்போம்.



இந்த விளையாட்டைக் குறைந்தது ஐந்து முதல் எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். அதிகமான பிள்ளைகள் இருந்தால் ஆட்டம் சற்று சுவாரஸ்யமாகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதாகவும் இருக்கும். ஐந்திலிருந்து பத்து வயது வரையுள்ள குழந்தைகள் ஒரு குழுவாகச் சேர்ந்து கொண்டு, விளையாடுவோர்கள் எல்லாம் சாட் பூட்டு திரி போட்டு ஒருவரைத் தேர்ந்தெடுப்பார்கள். மற்றவர்கள் அனைவரும் வட்டமாக உட்கார்ந்து கொள்வார்கள். ஒருவர் மட்டும் துண்டு அல்லது தனது சட்டை அல்லது வேறு ஏதாவது துணியை திரிமாதிரி முறுக்கி யாருக்கும் தெரியாதவாறு தன் ஆடைக்குள் மறைத்துக்கொண்டு அவர்கள் அமர்ந்திருக்கும் வட்டத்துக்கு வெளியே அவர்களைச் சுற்றிவருவார். அப்போது வெளியே சுற்றுபவர் “குலையா குலையா முந்திரிக்காய்” என்று பாடுவார். அதற்கு அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் சேர்ந்து குழுவாக “நரியே நரியே சுற்றி வா” என்று பாடுவார்கள். பின்பு “கொள்ளையடிப்பவன் எங்கிருக்கான்” என்று சுற்றுபவர் பாட “கூட்டத்திலிருக்கான் கண்டுபிடி” என்று அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் சேர்ந்து பாடுவார்கள். இப்படி இந்தப் பாடலைப் பாடிக்கொண்டே வருவார். அப்பொழுது அமர்ந்திருப்போரில் ஒருவருக்குப் பின்னால் அவருக்குத் தெரியாமல் துணித்திரியை வைத்துவிட்டு மீண்டும் தன் கையில் துணி இருப்பது போல் பாவனை காட்டிக்கொண்டு பாடிக்கொண்டே வருவார்.

தனக்குப் பின்னால் துணித்திரி இருப்பது தெரியவந்தால்

**மற்றவர்கள் நம் முதுகுக்குப் பின்னால் நிகழ்த்தும் செயல்களை எப்படி அவர்களுக்கும் தெரியாமல் கவனிக்க வேண்டும் என்பதையும், சுற்றி வருபவர்க்கு மற்றவர்கள் கவனிக்காதபோது எப்படி மற்றவரை ஏமாற்றுவது என்பதையும் அழகாகச் சொல்லிக்கொடுக்கிறது. தனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதை எப்போதும் விழிப்புடன் கவனிக்கும் பழக்கத்தை இந்த விளையாட்டைவிட யாரும் எளிமையாக சொல்லிக்கொடுக்க முடியாது.**

பேராசிரியர் கு.முருகேசன்

# தமிழர் விளையாட்டுகள்



அவர் அதனை எடுத்துக்கொண்டு ஓடி வந்தவரைப் பின் தொடர்ந்து அவர் முதுகில் அந்தத் துணியால் ஓங்கி அடித்துக்கொண்டே வருவார். அவர் அடியில் சிக்காமல் துரத்திக்கொண்டு வருபவர் இடத்துக்கு வந்ததும் அவர் இடத்தில் தான் அமர்ந்துகொள்வார். பின் கையில் துணி உள்ளவர் அதே பாடலை பாடிவர ஆட்டம் தொடரும்.

தனக்குப் பின்னால் துணித்திரி இருப்பது தெரியாமல் ஒருவர் அமர்ந்திருந்தால், ஒரு சுற்று வந்ததும் தான் வைத்த திரியை எடுத்து அவர் முதுகில் அடித்துக்கொண்டு துரத்துவார். அவர் அடி பட்டுக்கொண்டே ஒரு சுற்று வந்து தான் இருந்த இடத்திலேயே அமர்ந்துகொள்வார். இதுதான் விளையாட்டு.இந்த விளையாட்டை மேலை நாடுகளில் "டிராப் த ஹேண்ட்கர்ச்சீஃப்" என்ற பெயரில் விளையாடுகின்றனர். மேலும் இந்த விளையாட்டு அமெரிக்கா, ஜப்பான், ஆப்பிரிக்க மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் ஒருசில மாற்றத்துடன் விளையாடப்படுகிறது. உதாரணமாக பிரான்ஸ்சில் இந்த விளையாட்டு போஸ்ட்மேன் அல்லது மெயில் மேன் என்ற பெயரில் போஸ்ட் மேன் தபால் டெலிவரி செய்வதுபோல விளையாடப்படுகிறது. தந்திரமாக வைப்பது, அடிப்பது, அடிபடுவது, மற்றவர் பார்த்து மகிழ்வது போன்ற நிகழ்வுகள் இந்த விளையாட்டில் உண்டு.

இன்னும் சில ஊர்களில் வேறு பாடலையும் பாடுவது உண்டு.

*"திரி திரி பந்தம்*
*திருமால் தந்தம்*
*திரும்பிப் பார்த்தால் ஒருமொட்டு"*

என்று சுற்றிவருபவர் மட்டும் பாடிக்கொண்டே, தனக்குப் பின்னால் திரி வைக்கிறாரா என்று திரும்பிப் பார்ப்பவரையும் தலையில் ஒரு குட்டு போடுவார். ஓடியாடி கூடி விளையாடும் இதுபோன்ற பாரம்பரியக் குழு விளையாட்டுகள் பிள்ளைகளின் அறிவுத்திறன், கூட்டு முயற்சி, தன்னம்பிக்கை, சகிப்புத் தன்மை போன்ற நற்பண்புகளைச் சிறுவர்கள் மத்தியில் உருவாக்கும்.

இந்த விளையாட்டு நமது குழந்தைக்கு எந்த மாதிரியான வாழ்வியல் நற்குணங்களைச் சொல்லித் தருகிறது என பார்போம். ஆ.வி.பெர்ரோவஸ்கி என்னும் ஆய்வாளர் "விளையாட்டில் ஈடுபட்டுள்ள குழந்தைகளின் கூட்டத்தை ஒருவித சமூக உறவுப்பள்ளியாகப் புரிந்துகொள்ளலாம். இப்பள்ளி நடத்தையின் சமூக வடிவங்கள் இடையறாமல் உருவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுகின்றன. விளையாடுவதன் மூலம் குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைத்துச் செயல்படும் மானுடத் திறமையைக் கற்கின்றனர்" என்று கூறுவது தமிழர்களின் கிராமிய விளையாட்டுக்கு முற்றிலும் பொருந்தும். அதாவது சிறுவர்கள் விளையாட்டின் வாயிலாக சில திறன்களை பயில்கிறார்கள். இவ்வாறு பயில்கின்ற திறன்களைப் பயில் திறன்கள் என்கிறோம். குறிப்பாக கிராமத்தில ஒரு பழமொழி சொல்லுவாங்க "கண்ணு பார்த்தா கை செய்யுது", அதுக்கு என்ன அர்த்தம் என்றால் பிறர் செய்வதைப் பார்த்தே பிள்ளைகள் சில உடல் மற்றும் மனத் திறமைகளைக் கற்றுக்கொள்ளலாம் என்பதுதான். அவ்வாறு கற்ற திறனை பிறகு உடல் உறுப்புகளில் நிகழும் இயக்கங்களின் மூலம் விளையாட்டிலோ அல்லது வாழ்க்கையிலோ வெளிப்படுத்துகிறார்கள்.

குறிப்பாக குலை குலையா முந்திரிக்கா என்னும் விளையாட்டால் ஏற்படும் நன்மைகள் என்னவெனில் ஓடுதல் மற்றும் தொடுதல்தான் இந்த விளையாட்டில் நிகழும் உடல் இயக்கமாகும். அதனால் கால்கள் மற்றும் மூச்சு மண்டலமான நுரையீரல் போன்ற உடல் உறுப்புகள் வலுவடைகின்றன. ஓடுதலும் தொடுதலும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழும்போது அது திறனாக மாறுகிறது. அந்த திறன் மதிக்கப்படுகிறது. ஓடுதல் தொடுதலோடு பாடுதல் திறனும் இந்த விளையாட்டால் விளையும் நன்மையாகும்.

இந்த விளையாட்டில் ஓடுபவர்களைக் காட்டிலும் தொடுபவர் மிக விரைவாகச் செயல்பட்டு, அவர்களைத் தொடும்போழுதுதான் தொடுபவர்க்கு வெற்றி கிடைக்கிறது. அவரின் உடல் திறனும் வெளிப்படுகிறது. அதேபோல், ஓடுபவர் தொடுபவரைக் காட்டிலும் மிக வேகமாக ஓடி தொடுபவர் கையில் சிக்காத போதுதான் அவருக்கு வெற்றிகிடைக்கிறது. அவரின் உடல் திறனும் வெளிப்படுகிறது. ஓடுதலும் தொடுதலும் விரைவாக நிகழும்போதுதான் அது அவர்களின் திறனாக மாற்றம் பெறுகிறது.

இந்த விளையாட்டு அமர்ந்திருப்போருக்கு ஏமாற்றுக்காரர்களிடம் எப்படி கவனமாக இருக்க வேண்டும், மற்றவர்கள் நம் முதுகுக்குப் பின்னால் நிகழ்த்தும் செயல்களை எப்படி அவர்களுக்கும் தெரியாமல் கவனிக்க வேண்டும் என்பதையும், சுற்றி வருபவர்க்கு மற்றவர்கள் கவனிக்காதபோது எப்படி மற்றவரை ஏமாற்றுவது என்பதையும் அழகாகச் சொல்லிக்கொடுக்கிறது. தனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதை எப்போதும் விழிப்புடன் கவனிக்கும் பழக்கத்தை இந்த விளையாட்டைவிட யாரும் எளிமையாகச் சொல்லிக்கொடுக்க முடியாது.

இந்த விளையாட்டு ஒரு நல்ல உடற்பயிற்சியாகும். இதனால் கால்களும் தசைகளும் வலுவடைவதோடு மட்டுமல்லாமல் இரத்த ஓட்டமும் சீர்ப்படுதப்படுகிறது.

பெற்றோர்களே, விளையாட்டு என்பது உலகம் முழுக்கக் குழந்தைகளுக்குச் சொந்தமாக உள்ளது. அதை நமது குழந்தைகளுக்கும் சொந்தமாக்குவோம். ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவோம்.

**– இன்னும் விளையாடலாம்**


▪ மார்ச் 15, 1986 நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அமலாக்கப்பட்டது.

# எச்சில் தொட்டி

அன்று மனுநாள் சின்னச்சாமியின் உறவினர்கள் மட்டும் வந்திருந்தனர் உறவினர்கள் வந்ததைக் கேள்விப்பட்டு ஆவலாய் "டேய் மாப்ள வாங்கடா போலாம்" என்றபடி எல்லோரும் போனார்கள். கூடவே லெனின் காமராசுக்கும் மனு பார்க்க ஆள் வந்திருந்தனர்.

வேகவேகமாய்ப் போய்த் தேடினான் சின்னச்சாமி.

''டேய் மாப்ள டேய் இங்க இருக்கன்டா'' என அவருடைய மாமா குரல் எழுப்பினார். மாமன் மனைவியும் வந்திருந்தாள். வேறு யாரும் வந்திருக்கவில்லை.

"என்னடா மாப்ள எப்படி இருக்கறீங்க எல்லாரும் நல்லா இருக்கறீங்களா?" என உரத்த குரலில் பேசினார்.

இரைச்சல் பேரிரைச்சல். அழுகை, கோபம், ஆற்றாமை, பழியுணர்ச்சி அத்தனையும் மனு பார்க்க வந்தவர்களிடமும் சிறைபட்ட கைதிகளிடமும் அந்த நீண்ட அறையினில் பேரிரைச்சலாய் ஒலித்துக்கொண்டிருந்தது.

"மாமா நல்லா இருக்கறீங்களா மாமா? அத்தே மாப்பள எப்படி இருக்கறான் நல்லா இருக்கானா?"

"ஆங் இருக்கான் மருமவனே நீ எப்படி இருக்கற?"

"நல்லாருக்கறன் அத்த. எந்தக் கொறையும் இல்ல. குடும்பத்தையும் சாதி சனத்தையும் உட்டுட்டு இருக்கறது மட்டும்தா அத்த கொற. மத்தபடி என்ன கொற நேரத்துக்கு சோறு நேரத்துக்கு தூக்கம் ஏதும் காச்ச தலவலி மேலுக்கு முடிலனா கூட ஒடனே பாத்துக்கறாங்க அத்த. பேசாம ஒம்மவகிட்ட தெனமும் ஓரியாட்டம் பண்றதுக்கு பதிலா இங்கயே இருந்துக்கலாம்னு தோணுது அத்த" என்றபடி சிரித்தான்.

''இருக்கும் இருக்கும் மருமவனே கண்ணாலம் பண்றதுக்கு மின்னாடியே ஒனக்கு எம்மவளோட ஓரியாட்டம் தாங்கல. பண்ணிகிட்டா சிரிச்சி போயிடும் மருமவனே" என சிரித்தாள்

"ஏய் செத்த இரு" என்றபடி "மாப்ள ஒங்களுக்கு மட்டும் ஏன் மாப்ள பெயில் இவ்வளவு லேட்டாவுது. விசயம் தெரியுமா வடிவேலு பண்ணையக்காரன் பொண்டாட்டி ஒங்கள வெளிய எடுக்கறதுக்கு முயற்சி பண்றா அது தெரியுமா?

"தெரியாது மாமா! இங்க லெனின் அண்ணனோட கட்சிக்காரங்க எங்கள எடுக்கறதுக்கு ரொம்ப சிரமப்பட்டு வேலை செய்றாங்க மாமா"

"பாவம் அவங்கள்லாம் கம்யூனிஸ்டு கட்சிக்காரங்க நம்மளாட்டம் இல்லாத ஏழை பாழைங்களுக்காக ஒழக்கறவங்க. எங்க கேசுக்குனு ஊர் ஊரா தெரு தெருவா உண்டியல் வசூல் பண்ணிதா பன்றாங்க மாமா. போன வாட்டி வாய்தாவுக்கு வந்தப்ப அவங்க எங்கள நேரா பாத்துபேசிப்பிட்டுதா போனாங்க. ஊர அடிச்சி ஒலைல போட்டு திங்கறவனுங்களுக்கெல்லாம் காசு பணம் இருக்குது அப்படியே இல்லாமப் போனாலும் அவங்களுக்கு காசு கொடுக்க ஆளிருக்குது. நம்மளாட்டம் ஆளுங்களுக்கெல்லாம் ஒன்னுமே கெடையாது மாமா"

"ஏம்பா அமாவாசை நீ எப்படி இருக்க நல்லாருக்கியா?" என்றார் சின்னச்சாமியின் மாமா.

"ம் நல்லா இருக்கேன் ணா நீங்க பசங்கல்லாம் எப்புடினா நல்லா இருக்கறீங்களா?"

"ம் இருக்கம்பா ஒங்கிட்ட ஒரு விசயம் சொல்லணும் சொல்லக்கூடாதுனும் தோணுது, சொல்லாமயும் இருக்க முடில."

"பரவால சொல்லுணா"

"ஒம்பொண்டாட்டியும் செல்லாயியும் போற போக்கு எனக்கென்னமோ புடிக்கல. கொஞ்சம் அப்படி இப்படினு பேச்சு அடிபடுதுப்பா. ஊரே ஒரு மாதிரி பேசுது. அவங்க போறவார எடம் சரியில்ல. இதெல்லாம் நம்ம சாதிசனத்துல நாளைக்கு தல காட்ட முடியாது. ஒங்கிட்ட சொல்லிப்புட்டேன். சீக்கிரமா வெளிய வந்து கொஞ்சம் அவள கண்டிச்சு வையி. இல்லனா ரொம்ப பெரிய அவமானமா போயிடும்பா"

"இடைமறித்து அவர் மனைவி ஏம்பா அமாவாசை அந்த மனுசன் எதையுமே முழுசா சொல்லமாட்டாப்பல இப்படித்தான் அரை கொறையா எதாச்சும் ஒளறுவாப்புல. செல்லாயி ஊர்மேய போன மாதிரி இப்ப ஒம்பொண்டாட்டியும் அவளோட வேலைக்கு போறன்னு போய்கிட்டு இருக்கறா. புது பொடவை என்ன மேக்கப்பு மினுக்கிக்கிட்டு போறதென்ன எனக்கென்னமோ புடிக்கலப்பா. நீ சீக்கிரமா வெளிய வந்து ஒரு கண்டிசன் பண்ணு இல்லைனா அவள கழிச்சு கட்டு என குசலம் மூட்டுவதை மனுபார்க்கும் இடத்தில் சத்தமாய் பேசினாள்.

"ஏங்க அண்ணி இத சொல்லத்தான் இம்புட்டு தூரம் வந்தீங்களா? இது ஒரு விசயம்னு மெனக்கெட்டு இவ்ளோ

**உணர்வுகளும் உணர்ச்சிகளும் அறிவியல் பூர்வமான ஒண்ணுனு இந்த மக்களுக்குப் புரியப்போறதில்லை ஏன்னா? இந்த சமூகம் அப்படி ஒரு கட்டமைப்பை வலுவா கட்டி வைச்சிருக்கு. தான் எவ்வளவுதான் தாழ்ந்த சாதியா இருந்தாலும் எவ்வளவுதான் பொருளாதாரத்தில் பின் தங்கி வறுமைல வாழ்ந்தாலும், கண்ணுக்குத் தெரியாத கற்புங்கற விசயத்தை அவ்வளவு ஆழமா செலுத்தி வைச்சிருக்கு.**

**தோழர் சிவா சடையன்**

23

தூரம் பேச வந்திருக்கறீங்க?

நம்ம காலனில 150 வீடு இருக்குது. அத்தனையும் சாதிசனந்தானே. அன்னாடம் நீங்க ஆக்கறசோத்துல கைப்புடி அரிசி சேத்தி போட்டீங்கனாவே போதுமே. நூத்தம்பது நாளைக்கு எங்குடும்பம் பசியாந்துடுமே. அதை செய்ய நம்ம சனத்துக்கு மனசு வரதில்ல பொரணிபேசறதுக்குன்னு மட்டும் பஸ்ஏறி வரீங்களே?"

"ஏ த்த ஒனக்கு அறிவே இல்லையா எங்கவந்து எதப்பேசறதுன்னு தெரியல ஒனக்கு" என கடிந்துகொண்டான் சின்னச்சாமி.

"நீ எதுங்கொழப்பிக்காத மாப்ள அப்படிலாம் எதும் இருக்காது" என்றான் அமாவாசையைப் பார்த்து.

"அட விடு மாப்ள ஒரு பொண்னு தன்னோட சாதிசனம் சொந்த பந்தம்லாம் இருந்தும் தன்னோட வயித்துப்பாட்டுக்கு தேவடியாளா போறான்னா வெக்கப்பட வேண்டியது நானே எம்பொண்டாட்டியோ இல்ல. இதையெல்லாம் வேடிக்க பாக்கற இவங்கதான் மொத குற்றவாளி. எந்த பொண்ணும் அரிப்பெடுத்து அந்த தொழிலுக்கு போகமாட்டா மாப்ள அப்படி அரிப்பெடுத்தா காதுங்காதும் வைச்சமாதிரி பக்கத்துல அல்லது உள்ளூர்லயே எவனையாவது சேத்திக்குவா. இப்படி தொழிலுக்குப் போயி சோறு திங்கமாட்டா நீ விடு எங்கோவமெல்லாம் நம்ம சனத்துமேலதான்." என்றான் அமாவாசை.

"சரி சரி கௌம்பு கௌம்பு ஏம்மா எவ்வளவு நேரம்மா கதையளப்பீங்க போங்க போங்க. ஒங்களாட்டம் நெறைய பேர் நெறைய பேத்த பாக்கவேண்டி இருக்குது" என காவல் பணியில் இருந்த வார்டன்கள் விரட்டினர்.

"சரிப்பா நாங்க கௌம்பறோம். இந்தா இதுல மிச்சர், முறுக்கு, ஊறுகா பொட்னம் லாம் இருக்குது சாப்புடுங்க" என்று வார்டனிடம் கொடுத்தனுப்பினாள்.

"சரி போறோம்" என்றபடி கிளம்பினார்கள்.

போனபிறகு சின்னச்சாமி பல்லை நற நறவென கடித்தபடி அவர்கள் கொடுத்த தின்பண்டங்களை வீசினான்.

சட்டென அமாவாசை கையைப்பிடித்து "ஏ மாப்ள" என்றான்.


"பாரு மாப்ள வந்து என்னென்ன குசலம் வைச்சிட்டு போறாங்கனு பெரும மசுரு பீத்தறாங்க. ஒருத்தன் நலிஞ்சு போனா அந்த குடும்பத்துக்கு கை குடுக்கணும்னு நெனைக்கறதில்ல."

"சரி அதுக்குனு உணவுப்பொருள தூக்கி வீசறது எத்தவகையில சரியாகும். குடு மாப்ள நாம சாப்டலனா பரவாயில்லை இல்லாத யாருக்காவது கொடுக்கலாம்" என தடுத்து, அவரவர் செல்லை நோக்கி நடந்தனர்.

போகும்போது தோழர் லெனின் "அமாவாசை தோழர் வாய்ப்பிருந்தா அப்புறமா செல் பக்கம் வாங்க" என்றபடி நடந்தார்.

"வரேன் தோழர்" என்றபடி அமாவாசை செல்லை நோக்கி நடந்தான்.

"ஏன் தோழர் என்ன இருந்தாலும் சின்னச்சாமி சொந்தக்காரங்க அமாவாசைகிட்ட இப்படி பட்டுனு எதும் சொல்லியிருக்கக்கூடாது இல்லையா அவன் மனசு எவ்வளவு வேதனைப்படும். பக்கத்துல இருந்து கேட்ட எனக்கே ரொம்ப சங்கடமா போச்சு. அவன் மனசு என்ன பாடு படும்" என்றவாறே செல்லுக்குள் நுழைந்தார்கள்.



மௌனமாகவே இருந்த தோழர் லெனின்,

"டேய் தம்பி முருகா இங்க வா" என பக்கத்து அறைக்கைதியை அழைத்தார்.

"சொல்லுங்க சார்" என்றபடி பவ்யமாய் வந்தான்.

"முருகன் இந்தாப்பா இதுல கொஞ்சம் பழம் பிஸ்கட்லாம் இருக்குது எல்லாரும் பகிர்ந்து சாப்பிடுங்க" என்றபடி பொட்டலத்தைக் கொடுத்தார்.

"சரிங்...." என்றபடி வாங்கிச் சென்றான்.

உள் நுழைந்தவுடன் காமராசு தொண்டையைச் செருமியபடி "தோழர் நான் கேட்டதைப் பத்தி..."

"ஆமா தோழர் புரியுது நானும் கவனிச்சேன் சாமானியனா இருந்தா ஆத்திரமும் அழுகையும் கோபமும் இயல்பா வரும். ஏன் பகுத்தறிவு முற்போக்குனு பேசறவனே தன் மனைவி அடுத்தவனோட சிரிச்சி பேசறதையோ பழகறதையோ ஏத்துக்க முடியாதவங்கதான். ஏன்னா இது சமூகத்தினுடைய பொதுப்புத்தியாதான் இருக்குது. உணர்வுகளும் உணர்ச்சிகளும் அறிவியல் பூர்வமான ஒண்ணுனு இந்த மக்களுக்குப் புரியப்போறதில்லை ஏன்னா? இந்த சமூகம் அப்படி ஒரு கட்டமைப்பை வலுவா கட்டி வைச்சிருக்கு. தான் எவ்வளவுதான் தாழ்ந்த சாதியா இருந்தாலும் எவ்வளவுதான் பொருளாதாரத்தில் பின் தங்கி வறுமைல வாழ்ந்தாலும், கண்ணுக்குத் தெரியாத கற்புங்கற விசயத்தை அவ்வளவு ஆழமா செலுத்தி வைச்சிருக்கு.

நெறைய முற்போக்காளர்களே இன்றைக்கு வரை சரியான கருத்தொற்றுமை இல்லாமதான் ஆளாளுக்கு பயணிக்கறாங்க.

ஒரு சிலர் சாதிய ஒழிச்சாலே போதும். சமூகம் விடுதலை அடைஞ்சிடும்னு நெனைக்கறாங்க. மற்றொரு கூட்டம் பொருளாதார ரீதியாக முன்னேறினால் சமூகம் விடுதலை பெறும் னு நம்பறாங்க. ஒருசிலர் மதங்களையும் மூடத்தனங்களையும் ஒழிச்சாலே சமூக விடுதலை அடையும்னு நெனைக்கறாங்க. ஒரு சிலர் இனவாதம் மொழிப்பற்று மொழி வெறியில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும்னு நெனைக்கறாங்க.

உண்மையில் பாலியல் சுதந்திரம் தான் இங்க சமூக விடுதலைக்கு முதல் படி ங்கறதை மறந்துடறாங்க அல்லது ஏற்க மறுக்கறாங்க.

மனிதர்களுடைய பொதுப்புத்தி எல்லாத்துக்கும் தகுந்தார்ப்போல தலையாட்டுமே தவிர,

பாலின விருப்பு வெறுப்புகளையோ பாலியல் சுதந்திரத்தையோ அங்கீகரிக்க விரும்புவதில்லை.

இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டிலயும் இந்த பிற்போக்குத் தனம் மறையல இன்னும் பொறுத்துதான் ஆகணும்" என்று முடித்தார் லெனின்.

"தோழர்" என்றபடி உள் நுழைந்தான் அமாவாசை.

**– தொடரும்**



■ மார்ச் 17, 1958 கப்பல் போக்குவரத்தைச் சீர்செய்யும் விதமாக "சர்வதேசக் கப்பல் கழகம்" ஏற்படுத்தப்பட்டது.



# ஊருக்கு வெளியே

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்



மாசி
பங்குனி
சித்திரை
வைகாசி
அறுவடை முடிந்த
கிராமத்து தெருக்கள்!

எதிர்வீட்டு முனியன்
ஐப்பசிமாத மழையில் ஒழுகிய கூரைக்கு
புதுப் பனையோலையை
பின்னிக்கொண்டிருந்தான்!

எங்கோ வற்றிய குளத்திலிருந்து
தூக்கி வந்த நண்டு ஓடுகளை
வாசலில் போட்டுவிட்டுப் போயிருந்தது
செந்நாரை கொக்கு!

அந்த மத்தியான நேரத்தில் புளிய மரத்தடி நிழலில்
ரெட்டை மாட்டுவண்டியின் காளைகளுக்கு
லாடம் கட்டிக்கொண்டிருந்தான் வேலய்யன்!

அவிழ்த்த நெல்லை வாசலில் கொட்டி
காலால் பரப்பி காயவைத்துக்
கொண்டிருந்தாள் ஆரணியாமுட்டு பாட்டி!

ஈயம் பித்தளைக்குப் பேரீச்சம்பழம்
விற்றுக்கொண்டிருந்த
மாம்பட்டான் மணி
பழையை சைக்கிளை அரசமர
மேடையில்
சாய்த்துவிட்டு தாயம்
ஆடுபவர்களோடு
சேர்ந்துகொண்டான்!

கருவாட்டுக் கூடையோடு வந்த
கரிமேட்டுக்கெழவி கதைபேச
உட்கார்ந்துவிட்டாள் காத்தாயி
திண்ணையில!

வேப்ப மரத்தடியில் கார்கலப்பையைச்
செதுக்கிக்கொண்டு உலைக்களத்தை
ஊதிக்கொண்டிருந்தார்
மோட்டுத்தெரு பரமு ஆச்சாரி!

வேலிக்காத்தான் தோட்டத்து
சில்லுண்டு சத்தங்கள்
ரீங்காரமிட்டது தெற்குத்தெரு
தாண்டி!

தபால்காரரின் மிதிவண்டி சத்தம்
பட்டாளத்தான் வீட்டை
அடைந்ததும் ஓய்வெடுத்துக்
கொண்டது

படித்துறையில் குளித்து முடித்து
ஈரவேட்டியை இடுப்பில்கட்டி
அக்ரகாரத்தை நோக்கி நடந்து
வந்தார் சங்கரன் அய்யர்!

ஊர்க்கோடி வரை நடந்து வந்த
கீழத்தெரு அமாவாசை
கொல்லைப்புற வழியே
சென்றடைந்தான் அம்பேத்கர் காலனிக்கு!

மனிதர்கள் வாழ்ந்த தெருக்களில்
மனிதம் செத்துக்கிடந்தது
விண்ணில் கால்வைத்த தேசத்தில்
வீதியில் கால்வைக்க முடியாத
அமாவாசைகளின் கால்தடங்கள்
ஊருக்கு வெளியே! ●